மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1 - 6 - 55 | இதழ் 3



அறிவியல் அறிஞர் கார்வர்

அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

யாருக்கு ஊசி?

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பொழுதுபோக்குவதற்குரிய பற்றுக் கோடுகளில் மிகச்சிறந்த பற்றுக்கோடு காஞ்சித் தோழர் சி. வி. இராசகோபால் ஆவார்!

அறிஞர் அண்ணா அவர்களும் தோழர் சி. வி. இராசகோபால் அவர்களும் மிகச் சிறிய வயதிலிருந்தே இணைபிரியா நண்பர்கள். பள்ளிப்பருவக் காலத்திலும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து பள்ளிக்குச் செல்வதும், ஒன்றாகவே திரும்பிவருவதும் ஆன பழக்கம் பூண்டிருந்தனர். தோழர் சி. வி. இராசகோபால் அவர்களின் பேச்சு, போக்கு, நடவடிக்கைகள் எல்லாம் அண்ணா அவர்களுக்கு எப்பொழுதும் நகைச்சுவை பயப்பனவாகும். அத்தகைய நகைச்சுவையினால் ஏற்படும் மகிழ்வின் பத்தைப் பெறுவதிலே அண்ணா அவர்களுக்கு எப்பொழுதுமே விருப்பம் மிகுதி. அண்ணா அவர்களின் கேலியும் கிண்டலும் தோழர் இராசகோபால் அவர்களை நிலை தடுமாறவைத்து மேலும் மேலும் நகையாடற்குரியவராக அவரை வைத்துவிடும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் இராசகோபாலைப்பற்றிக் குறிப்பிடும் போது, அவர், தமக்கு ஒரு 'ஞாயிற்றுக்கிழமை' போன்றவர் என்று கூறுவார். அதாவது 'ஞாயிற்றுக்கிழமை' எப்படிப் பொழுதுபோக்குவதற்குரியதொரு நாளாக விளங்குகிறதோ, அப்படித் தோழர் இராசகோபால் பொழுதுபோக்குவதற்குரிய ஒருவராக விளங்குகிறார் என்று பொருள்.

தோழர் இராசகோபால் அவர்களை மனதில் வைத்துக்கொண்டுதான் அறிஞர் அண்ணா அவர்கள் 'சந்திரமோகன்' நாடகத்தில் பகதூர் என்ற ஒரு நகைச் சுவை உறுப்பைப் படைத்தார்கள். நாடகத்தில் அந்த உறுப்பை ஏற்று நடிக்கும் வாய்ப்பை அண்ணா அவர்கள் தோழர் இராசகோபால் அவர்களுக்கே கொடுத்தார்கள். தோழர் இராசகோபால் அவர்கள் நடித்துக்காட்டிய அந்த உறுப்பை ஏற்று, வேறு யார் யாரோ நீண்டகாலமாகப் பழக்கமான நடிகர்கள்கூட நடித்துப் பார்த்தார்கள். ஆனால் தோழர் இராசகோபாலைப்போல் அவ்வளவு திறமையாக நடித்துக் காட்டியவர்கள் வேறு யாருமில்லை என்னலாம். காரணம் தோழர் இராசகோபால் அவர்களால் மட்டுந்தான் அந்த உறுப்புக்குரிய நகைச்சுவையை உண்டாக்க முடியும் என்பதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் இராசகோபால் அவர்களை ஓயாமல் கிண்டல் செய்துகொண்டேயிருப்பார். ஒருபொழுது தோழர் இராசகோபால் அவர்கள் அண்ணாவிடம் வந்து தம்மை இரவு எலி ஒன்று கடித்துவிட்டதாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் சிரித்துக்கொண்டே "எலியா? உன்னையா?" என்று கேட்டார்கள்.

"ஆமாங்க! என்னைத்தான் எலி கடித்துவிட்டது!" என்று தோழர் இராசகோபால் இரக்கந்தோன்றக் கூறினார்.

"ஊசி போடனுமே! ஊசி போட்டாச்சா?" என்று அண்ணா அவர்கள் கேட்க, உடனே இராசகோபால் "இன்னும் போட்டுக்கலிங்க!" என்று கூறினார்.

உடனே அண்ணா "யாருக்கு ஊசி?" என்று இராசகோபாலைப் பார்த்துக் கேட்டார்கள்.

"எனக்குத்தான்!" என்று இராசகோபால் அவசரமாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் சிரித்துக்கொண்டே, "உனக்கல்ல! அந்த எலிக்கு ஊசிபோட்டாச்சா என்றுதான் கேட்டேன்!" என்றார்.

"எலிக்கு ஏன் ஊசி?" என்று இராசகோபால் கேட்க, அதற்கு அண்ணா, "அதனுடைய விஷம் உன்னைப் பாதிப்பதைவிட, உன்னுடைய விஷமல்லவா அதனை அதிகமாகப் பாதிக்கச் செய்திருக்கும்!" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

1 - 6 - 55 புதன்கிழமை

நிதி திரட்ட வாரீர்!

பேரூரில் கூடிய பொதுக்குழுத் தீர்மானப் படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு அண்மையில் திருச்சியில் கூட இருக்கிறது. அதற்கான ஆக்கவேலைகளிலும் முன்னேற்பாடுகளிலும் மும்முரமாக ஈடுபடும்படி, கழகத் தோழர்கள் அனைவரையும், சென்னையில் கூடிய புதிய பொதுக்குழு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

திருச்சியில் கூடப்போகும் மாநில மாநாடு பலவகைகளிலும் சிறப்பும் முக்கியத்துவமும் கொண்ட ஒரு 'வரலாற்று மாநாடாகக் காட்சியளிக்கும் என்று கழகத் தோழர்களாலும், கழகத்திடத்துப் பற்றுக்கொண்டோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை கோகலே மண்டபத்தில், 24-5-55-ல் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றும்போது அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டபடி, திராவிட முன்னேற்றக் கழகம் மக்களாட்சி முறைக்கேற்ப அடுத்தப் பொதுத்தேர்தலில் கலந்துகொள்ளவேண்டியது அவசியமா? அல்லவா? தேர்தலில் திராவிடக் கழகத்தோடு இணைந்து நின்று பணியாற்றலாமா? அல்லது இணையாமல் தனியாகவேநின்று பணியாற்றலாமா? என்பனபற்றிய முக்கியமான முடிவுகளைப் பொதுவாக்கெடுப்பு மூலம் திருச்சி மாநில மாநாட்டில் எடுக்கவேண்டியேற்படலாம். மேலும் தொழிற்சங்கங்களைப் பொறுத்து தி. மு. கழகம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதுபற்றியும் மாநில மாநாடு முடிவுசெய்ய இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர்கள் அத்துணைப்பேரும் கலந்துகொண்டு, தங்கள் கருத்தினைத் தெரிவித்துக், கடமையாற்றவேண்டிய முக்கியமான மாநாடாகும் இது.

சிங்கம் நடந்து சென்றுகொண்டிருக்கும் போது, தாம் எவ்வளவு தொலைவு வந்திருக்கிறோம் என்பதைக் காண்பதற்காக இடையில் ஓரிடத்தில் நின்று திரும்பிப்பார்க்குமாம்; பிறகு செல்லவேண்டிய தொலைவை எட்டிப் பார்த்து நேரே செல்லுமாம். அதனை அரிமா நோக்கு என்று கூறுவார்கள் ஆன்றோர்கள். அதுபோலவே திராவிட முன்னேற்றக் கழகமும், மாநில மாநாடுதோறும் நின்று, தன்னுடைய இறந்தகால நடவடிக்கைகளைத் திரும்பிப்பார்த்து, எதிர்கால ஆக்கவேலைகளுக்கான திட்டங்களைத் தீட்டுகிறது என்னலாம். திராவிட முன்னேற்றக்கழக மாநாடு ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான திருப்பு மையம் என்றுதான் கூறவேண்டும்.

திருச்சி மாநாட்டைச் சீரும் சிறப்பும் உடையதாகச் செய்ய முன்பணமாக ரூபாய் இருபத்தையாயிரம் திரட்டவேண்டும், அதனைத் திரட்டும் பணியினை எல்லா மாவட்டக் கிளைகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பொதுக்குழு முடிவுசெய்திருக்கிறது. ரூ.2000-க்குக் குறையாமல் ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப நிதி திரட்டித்தருவதாக மாவட்டச் செயலாளர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிளைக்கழகத் தோழர்கள் நிதிதிரட்டுவதிலே அக்கரைகாட்டி, மாவட்டங்களின்பங்குத்தொகைகளைவிரைவில் செலுத்துவதற்குப் பேருதவிபுரியவேண்டும். மாநில மாநாட்டிற்கான நிதிப்பணம் ரூபாய் இருபத்தையாயிரமும் எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் திரட்டப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு மாநாடும் விரைவில் நடைபெறுவதற்கு வழிபிறக்கும். நிதி திரட்டுவதில் காலத்தாழ்வு ஏற்படுமாயின், மாநிலமாநாடு நடைபெறும் காலமும் மிகமிகத் தள்ளிப்போக நேரிடும். எனவே இதனை மனதில் வைத்துக் கொண்டு நிதிதிரட்டும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக்கழகத் தோழர்கள் அத்துணைப்பேருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம். ஆங்காங்குள்ள கழகத்தோழர்கள் கொடுக்கிற சல்லிக்காசுகள்தாம் சிறுசிறு துளிகளாகிப் பெருவெள்ளமாக மாறவேண்டும். இதுவரையில் கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கெல்லாம் நாட்டுமக்கள் நல்லாதரவு தந்துவந்ததைப்போலவே, இம்முறையும் பெருத்த ஆதரவு தந்து, மாநிலமாநாட்டு முயற்சியை வெற்றிகரமாக்கிக்காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

கழகத் தோழர்களையும், கழகப் பற்றுடையோரையும் நிதி திரட்ட வாரீர்! வாரீர்! வாரீர்!!! என்று உருவலன்போடு அழைக்கிறோம்!

கருத்துக் கதிர்

அடிகளார் போர்க்கோலம் பூணுகிறார்!

சிவனடியாரான குன்றக்குடி அடிகளார் நாத்திகர்களுக்கு எதிராக 'அருள்நெறி ஆழி' யைச் சுற்றிக்கொண்டு, போர்க்கோலம் பூண்டு எழுந்துவிட்டார்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில் நாத்திகர்கள் நின்றால், அவர்களை அருள்நெறித் திருக்கூட்டத்தார் எதிர்த்துப் போட்டியிடுவார்கள் என்று அவர் கொக்கரித்துள்ளார்! 'அருள் நெறி' ஓங்கி 'நாத்திகம்' தானே மறையும் என்பதிலே அடிகளாருக்கு நம்பிக்கையில்லை; 'நாத்திகம்' அழிந்தால் தான் 'அருள்நெறி' தலைதூக்கும் என்ற நிலைமைக்கு அடிகளார் வந்துவிட்டார். நாத்திகத்தை ஆத்திகம் தன் கொள்கையால்—சிறப்பால்—புகழால் வெல்லமுடியாது, போரிட்டுத் தான் அழிக்கமுடியும் என்ற முடிவுக்கு அடிகளார் வந்துவிட்டார். அருள்நெறிச் செயல்களிலே இதுவும் ஒன்றுபோலும்! அடிகளாரின் நிலைமைகண்டு இரங்குகிறோம்!

தேர்தலில் நாத்திகன் தோற்றுப்போனால்' 'மனிதன்' தோற்றதாக அவன் ஒப்புக்கொள்வான்; 'ஆண்டவனின் வரம்' பெற்ற அருள்நெறித் திருக்கூட்டத்தான் தோல்வியுற்றால், 'ஆண்டவன்' தோற்றதாக அடிகளார் ஒப்புவாரா? ஆனால் ஒன்றுமட்டும் உறுதி, அருள்நெறித் திருக்கூட்டத்தார் வெற்றிபெற்றால், 'ஆண்டவன்' வெற்றிபெற்றார் என்று பறைசாற்றுவார்கள்!

மக்களாட்சி அமைப்பில் யாரோடும் யாரும் போட்டிபோடலாம்; எனவே அருள்நெறித் திருக்கூட்டத்தார் போர்க்கோலம் பூணுவதில் வியப்பில்லை! 'ஆண்டவன்' பேரால் தேர்தலில் நின்று, 'ஆண்டவனை'த் தேர்தலில் இழுத்து நிறுத்துவது, 'அவனை'த் தெளிவாக மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏற்ற வாய்ப்புதான்!

'பகுத்தறிவாளர்களை' அழிக்கவேண்டும் என்று 'பக்தகோடிகள்' கருதுகிறார்கள்; ஆனால் 'பக்த கோடிகளிடத்தே பகுத்தறிவுக் கருத்துக்கள் பரவவேண்டும் என்று 'பகுத்தறிவாளர்கள்' கருதுகிறார்களே ஒழிய, அவர்களை அழிக்கவேண்டும் என்று ஆத்திர மொழி பகர்வதில்லை! இதிலிருந்தே 'அருள்நெறி' யாரிடத்தில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

அவரே கூறுகிறார்!

'இந்தியா' என்றால் வடநாட்டை மனதில் நினைத்துக்கொண்டுதான் வடநாட்டுத் தலைவர்களும், வடநாட்டு அரசியலாரும் செயலாற்றிவருகிறார்களே யல்லாமல், அவர்கள் தென்னாட்டைப் பற்றிக் கவலைப்படுவதே யில்லை என்று நாம் கூறிடும்போதெல்லாம் அதனை ஒப்புக்கொள்ள மறுக்கும் பண்பினர் தோழர் டி. டி. கிருட்டினமாச்சாரியார் அவர்களது கூற்றைக் கேட்டால் மனந்தெளிவர் என்று கருதுகிறோம். இந்திய பொறித்தொழிலமைச்சர் தோழர் டி. டி. கிருட்டினமாச்சாரியார் ஆய்வுக்குழு ஒன்றிற்குத் தலைமைவகித்த போது, மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பகுதியைப் பற்றி மிக உபத்தி பேசி, அதற்கு அதிக உதவிவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியபோது, தோழர் டி. டி. கே. "'இந்தியா—அதாவது பாரதம்—அதாவது உத்தரப்பிரதேசம்' என்று இதுவரையில் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்பொழுது இங்கு சிலர் 'இந்தியா—அதாவது பாரதம்—அதாவது மத்திய பிரதேசம்' என்று சொல்லக் கேட்கிறேன்" என்று கூறினாராம். "இந்தியா" என்றால் "வடநாடு" என்றுதான் வடநாட்டவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தோழர் டி. டி. கே. அவர்களே ஒப்புக்கொள்வதைக் காணலாம்! அவர் கூறுகிறார் என்பதே போதுமான சான்றாகுமே!

ஃ ஃ ஃ

'சாது'க்களைப் பற்றி நேரு!

சாதுக்கள் அதாவது சாமியார்களைப்பற்றி தன்மதிப்பு இயக்கம் என்ன சொல்லிவரு றதோ, அதையே பண்டித நேரு. புதுடில்லியில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் அண்மையில் கூறியிருப்பது போற்றிப் பாராட்டத் தக்கதாகும். தோழர் நேருவின் கூற்று வை கர்களுக்குக் காணிக்கையாகட்டும். அவர் கூற்று வருமாறு:

"சாதுக்கள் பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், சாதுக்களில் பெரும்பாலானவர்கள் உண்மை சாதுக்கள் அல்ல. காவி உடைகள் தரிப்பதன்மூலம் இவர்கள் மக்களைக் கவருகின்றனர். காவி உடை அணிந்திருந்தால் மாத்திரமே ஒருவர் உண்மை சாதுவாகிவிடமுடியாது. இந்தியாவில் 80 இலட்சம் சாதுக்கள் இருக்கின்றனர். எவ்வித வேலையுமின்றி இவர்களில் பலர் சொகுசான வாழ்க்கை நடத்துகின்றனர். நன்றாகச் சாப்பிடுகின்றனர். பாமர மக்களை மதத்தின் பெயரைச்சொல்லி ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம் பறிக்கின்றனர். தங்களை ஏமாற்றுவதற்காகவே சாதுக்கள் வேடத்தில் வரும் இத்தகையவர்களிடம் மக்கள் நம்பிக்கைவைக்கக்கூடாது."

∴ ∴ ∴

நிருவாகத் திறமையின்மை

இந்திய அரசியலாரின் நிருவாகத்திறமையின்மையைக் காட்டும் பல சான்றுகளிலே, மின்சார—நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்து வாங்கப்பட்ட இயந்திரங்களிலே பல தூங்குவதே போதுமான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பெரிய திட்டங்களில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் பற்றி ஆய்வு நடத்த இந்திய அரசியலார் அறிஞர்குழு ஒன்றினை நியமித்தனர். அந்தக்குழு ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டது. மொத்தம் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ரூ. 40 கோடி பெறுமான இயந்திரங்களில் ரூ. 6 கோடி பெறுமான இயந்திரங்கள் வேலையற்றுக் கிடக்கின்றனவாம். மொத்த இயந்திரங்களின் எண்ணிக்கையில் இது 48 சதவிகிதம் ஆகும். முக்கியமான உறுப்புகள் கிடைக்காத காரணத்தாலேயே இந்த இயந்திரங்கள் வாளாக் கிடக்கின்றனவாம். இந்திய அரசாங்கத்தின் மூலம் பணம் பாழாகும் விதங்களிலே இதுவும் ஒன்று!

∴ ∴ ∴

அவரும் ஒப்புக்கொள்கிறார்

பெரிய வளர்ச்சி திட்டங்களைப் பொறுத்துத் தென்னாடு புறக்கணிக்கப்பட்டது என்பதை இந்திய நிதி அமைச்சர் தோழர் சிந்தாமணி தேசுமுக் அவர்களே ஒப்புக்கொள்கிறார். வடக்கே திட்டங்கள் மிக மும்முரமாக நடைபெறுவதற்குக் காரணம், அத்திட்டங்கள் ண்டகாலத்துக்கு முன்பே தயாரிக்கப்பட்டிருப்பதுதான் என்று அவர் சமாதானமும் கூறியுள்ளார். அண்மையில் அவர் பெங்களூர் வந்திருந்தபோது செய்தி நிருபர் மாநாட்டில்பேசும்போதுதான் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு வடநாட்டு முதலாளிகளால் வடநாட்டின் நலத்தை முன்வைத்துத் தயாரிக்கப்பட்ட 'பம்பாய்த்திட்டத்'தின் சாயல்தானே, ஐந்தாண்டுத் திட்டங்களெல்லாம் என்று நாம் கொண்ட ஐயப்பாடு, தோழர் தேசுமுக் அவர்களின் கூற்றால் இப்பொழுது உண்மையாகப் புலப்படுவதை அறிந்துகொள்ளலாம். எனவே அப்படி வடநாட்டு முதலாளிகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் தென்னாட்டில் எந்தப் பலனை எதிர்பார்க்க முடியும்? ஆகவேதான் தென்னாடு வடநாட்டுத் தொடர்பினின்றும் பிரிய வேண்டும் என்று நாம் கூறுகிறோம். நமக்கு ஏற்ற திட்டங்களை நாமே வகுத்துக்கொள்ளலாம்!

∴ ∴ ∴

இந்தியாவில் செருப்பு அணிவோர்

இந்தியத் துணைக்கண்டத்தில் செருப்பு (காலணி) அணிவோர் மிகமிகக் குறைவு. மொத்தம் இந்தியாவில் செருப்புகளைக் கணக்கிட்டால் ஆளுக்கு ஒருசோடி செருப்பு வீதம் 100-க்கு 25 விகிதத்தினர் மட்டுமே பெறுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் நூற்றுக்கு நூறு மக்களும் ஆளுக்கு 3 சோடி செருப்புகளைப் பயன்படுத்துகின்றனர்.

மன்றம்

மலர் - 2 1953 - 54
மலர் - 3 1954 - 55

24 இதழ்கள்கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட
மலர்கள் ஒவ்வொன்றும்
விலை ரூ. 8-0-0
(தபாற்செலவு உட்பட)
கழிவு இல்லை. முன்பணம் அனுப்பவேண்டும்.
வி. பி. கிடையாது.
மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10
வீதம் அனுப்பவேண்டும்.
நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

அறிஞர் கார்வர்

“வீல்” “வீல்” என்ற சத்தம். ஆறுமாதங் கூட நிரம்பாத பச்சிளங் குழந்தை வேதனையால் துடிதுடித்துக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த நாலைந்து முரடர்கள் குழந்தை அழுவதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இதைக் கவனித்தவருக்குக் குழந்தை மீது இரக்கமும், கயவர்கள்மீது கோபமும் உண்டானது. அலைந்து திரியும் வழிப்போக்கர்களிடம் ஆறுமாதக் குழந்தை காணப்பட்டது ஆச்சரியமாயிருந்தது.

“உயிர் போய்விடும்போல் குழந்தை துடிதுடிக்கிறது. பேசாமல் வேடிக்கை பார்க்கிறீர்களே!”

அவரை முறைத்துப் பார்த்துவிட்டு முரடர்கள் வேறுபக்கம் திரும்பினார்கள்.

“அநியாயமாக இருக்கிறதே! கத்தி, கத்தி தொண்டை கம்மிவிட்டது. கைக்குழந்தையைச் சமாதானப்படுத்தாமல், கல்நெஞ்சினராய் வேறு திக்கு நோக்கி நிற்கிறீர்களே! குழந்தையின் அழுகுரல் கேட்கவில்லையா?”

“உனக்கு வேறு வேலையில்லையா?”

“வேலையில்லாத வெட்டியல்ல. வெளியில் வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அத்துடன் நெஞ்சில் இரக்கமும் இருக்கிறது. நீக்ரோ குழந்தை, பார்ப்பதற்கு அழகாயில்லை. அதற்காகக் குழந்தையை இறக்கும்படி கவனிப்பின்றி விடுவது தகாது.”

அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களும், மற்ற குறிப்புகளும் அவர்கள் கொலை கொள்ளை எதற்கும் அஞ்சாதவர்கள் என்பதைக் காட்டின. உண்மையில் அவர்கள் கொலை, கொள்ளை இவைகளால் வாழ்பவர்களே. குழந்தை அழுவதைப் பார்த்தவர் குழந்தையைச் சமாதானப்படுத்த அருகே போனார்.

“குழந்தையைத் தொடாதே.”

“அழுகிறதே, சமாதானப்படுத்துகிறேன்.”

“குழந்தை உனக்கு வேண்டுமானால் எடுத்துப் போ.”

“குழந்தையா! நான் எடுத்துப்போகலாமா?”

“பொறு, அவசரப்படாதே. குழந்தைக்கு பதில் எவ்வளவு பணம் கொடுப்பாய்?”

“கைக் குழந்தையை காசுக்கு விற்க துணிந்துவிட்டீர்களா? எவ்வளவு க நெஞ்சு.”

“காசு இருந்தால் பேசு, இல்லாவிட்டா போ.”

“குழந்தை இவர்களிடத்திலிருந்தா இறந்துதான்போகும். பரிதாபமாயிருக்கிறது ஐயோ! என் செய்வேன், என்னிடம் பண கிடையாதே! வேறு ஏதாவது கேளுங்கள் தருகிறேன்.”

“தரித்திரமே! உன்னிடம் என்னதா இருக்கிறது?”

“அதோ மேய்கிற குதிரை என்னுடையது தான். உங்களுக்கு வேண்டுமா?”

கொள்ளைக்காரர்களுக்குக் குதிரை என் பிரியமதிகம். குழந்தைக்குப் பதில் குதிரை எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டனர். ஓ டப்பந்தயங்களில் ஓடிய குதிரை. ஆ கால் நொண்டியாகிவிட்டது. பாதகமில் நோஞ்சல் குழந்தைக்கு நொண்டிக்குதி மேல் என்றனர்.

பண்டமாற்று நடந்தது. நொண்டிக்குதி யுடன் வழிபறிக் கொள்ளைக்காரர்கள் போ கள். ஆறுமாதக் குழந்தையுடன் குதிரை சொந்தக்காரன் திரும்பினான்.

குழந்தை விற்கப்பட்டது. கதையல் அமெரிக்காவில் சென்ற நூற்றாண் நிகழ்ந்த சம்பவம்.

இரக்க நெஞ்சினன் பார்க்காதிருந்தா குழந்தை இறந்திருக்கும். நொண்டிக்குதி யும் கைமாறியிருக்காது.

குழந்தை இறந்திருக்கும். கொள்ளைக்கா கள் சவத்தை விட்டுப்போயிருப்பார்க கழுகால் சிதைக்கப்பட்டு, எலும்புக் தோன்றி, பின் அலைக்கப்பட்டு, சிதறி ம திருக்கும். குதிரை கொடுத்தவன்கூட, கு தையை வாங்காதிருந்தால், சிறிது காலத் மறந்திருப்பான்.

சிறு குழந்தை கவனிக்கப்படாது இறந்திருந்தால் பெரும் அறிஞனை, சிறந்த ஆராய்ச்சியாளனை உயர்ந்த விஞ்ஞானியை உலகம் இழந்திருக்கும்.

கார்வர்! அந்தப் பெயர் விஞ்ஞான உலகில் ஒளிவிட்டிருக்காது.

* * *

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. அடிமை முறை ஒழியவேண்டுமென்று வடக்கு அமெரிக்க நாடுகள் ஆரவாரித்தன, அடிமை முறையை அகற்றமுடியாதென்று தெற்கு நாடுகள் எதிர்த்தன. வடக்கு நாடுகளில் தொழில் முறை வளர்ந்து சமத்துவ நோக்கம் பரவியிருந்தது. தெற்கு நாடுகளில் நீக்ரோ வகுப்பினர் அடிமைப் பண்ணைகளில் உழன்றனர். இரண்டு பகுதிக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை பெரும்போராட்டமாக மாறியது. கடுமையானப் பேச்சு, கலகம் இவை முற்றி உள்நாட்டுச் சண்டைக்கருகில் நின்றது. இந்த நிலையில் ஆப்பிரஹாம் லிங்கன் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடிமை முறையை ஒழித்துக்கட்டுவதில் லிங்கன் உறுதியாயிருந்தார். அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், தென் ஐக்கிய நாடுகள் போர்தொடுத்தன. நேர்மை, கொள்கை, மனிதாபிமானம், விடுதலை உணர்ச்சி, இவைகளுக்காக வடக்கு நாடுகள் போராடின. பிற்போக்கு, பழமை, அடக்கு முறை, ஆதிக்கவெறி இவைகளைக் காப்பாற்ற தெற்கு நாடுகள் போரிட்டன. ஆரம்பத்தில் வடக்கு நாடுகள் படைபலமற்றிருந்தபோதிலும், சிறுகச் சிறுக வளர்ந்தது. ஆயிரக்கணக்கிலிருந்த படைவீரர் பெருகி, பத்து லட்சத்துக்கு மேற்பட்ட வீரர்கள் லிங்கன் படையில் திரண்டனர். தெற்கு நாடுகளோ ஆதிமுதல் வளர்த்துவந்த படைவரிசைகளை ஆங்கில, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் களத்தில் நிறுத்தின. ஆயிரக்கணக்கான மைல் தூரத்துக்குப் போர்க்களம் விரிந்திருந்தது. நாடு ரணகளமாகியது. இருப்பதா, இறப்பதா? என்ற போராட்டத்தில் கடைசிவரைப் போராட இரு நாடுகளும் பின்வாங்கவில்லை. நான்கு ஆண்டுகளாகியும் சண்டை முடிவுக்கு வரவில்லை.

அடிமைகளின் கதி தராசுமுனையில் நின்றது. வடக்கு நாடுகளுக்கு வெற்றி—விடுதலை. தெற்கு நாடுகளுக்கு வெற்றி—அடிமை முறை. 1864-ம் ஆண்டில் சண்டையின் போக்கை மாற்றி அமைக்கும் விதத்தில் உறுதியான வெற்றியொன்று வடக்கு நாடுகளுக்குக் கிடைத்தது. விடுதலை வெற்றிபெற்றது. லிங்கன் வெற்றிபெற்றார். அடிமைகள் ஆரவாரித்தனர். போராட்டம் மிகுந்த, பெருமைமிக்க அந்த ஆண்டில்தான் கார்வர் பிறந்தார். அடிமைகளுக்கு விடுதலையையும், அமெரிக்காவுக்கு நற்பெயரையும் சண்டையின் வெற்றி கொடுத்தது. நீக்ரோ வகுப்பினருக்குப் பெருமையையும் அமெரிக்காவுக்கு வளத்தையும் கார்வர் கொடுத்தார். தம் இடைவிடாத உழைப்பால், போராட்டத்தைப் போர்க்களத்திலல்ல, ஆய்வுக்களத்தில் நடத்தினார். சண்டையில் கிடைத்த வெற்றிகளைவிட, அவர் கொடுத்த வெற்றியே வாழ்க்கையை வளம்படுத்திற்று.

தெற்கு நாடுகளில் ஒன்றான மிசௌரியிலுள்ள டைமண்ட்குரோவ் என்ற ஊருக்கருகில் 1864-ல் கார்வர் பிறந்தார். அவருடைய பெற்றோர் அடிமை நீக்ரோ வகுப்பினர். குழந்தை பிறந்த கொஞ்ச காலத்துக்குள் தந்தை இறந்தார். ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்பொழுது, சேயும் தாயும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களால் தூக்கிச்செல்லப்பட்டனர். நொண்டிக் குதிரைக்குப் பதில் ஆறு மாதக் குழந்தை வாங்கப்பட்டது. தாய் என்ன ஆனாள்? எவருக்குமே தெரியாது. தாய் தந்தையார் யாரென்று கார்வருக்குத் தெரியவே இல்லை, கண்டுபிடிக்கப்படவுமில்லை.

1865-ல் அடிமை முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது மோசசு கார்வர் என்ற வெள்ளை முதலாளி அனாதையான சிறு குழந்தையை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டார். அங்கு வளரும்பொழுதுதான் குழந்தைக்கு அக்குடும்பப்பெயரான கார்வர் என்ற பெயர் ஏற்பட்டது. குடும்ப வேலைகளைச் செய்வதற்கு வளர்க்கப்பட்டார்.

கல்வி கற்கவேண்டுமென்ற ஆசை சிறு வயதிலேயே உண்டானது. அடிமையின் மகன், நீக்ரோ வகுப்பினன், அனாதை, ஏழை இந்த நிலையில் கார்வரால் எளிதில் கல்விபெற முடியவில்லை. தன்னையே நம்பி, தன் வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள கார்வர் வெளிக்கிளம்பினார். பண்ணைக்குப் பண்ணை அலைந்து கூலிவேலை செய்து வயிறுவளர்த்தார். இரவு வேளைகளில் வயலோரத்திலும், வைக்கோற் பரப்பிலும் உறங்கினார். தொல்லையும், நிலையற்ற வாழ்க்கையும் அதிகரித்தபோதிலும் கல்வி கற்க வேண்டுமென்ற ஆசை கருகவில்லை.

பின் ஒருவர் வீட்டில் வேலைக்கமர்ந்து

அவர்களிட்ட வேலைகளனைத்தையும் செய்து அச்சிற்றூரிலிருந்த ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். ஆரம்பக் கல்வி முடிந்ததும் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். உணவு, உடை, படிப்புச்செலவு முதலியவைகளைச் சமாளிக்க, துணிகளை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்டார். படிப்புநேரம் முடிந்ததும், அழுக்குத் துணிகளை எடுத்துவந்து வெளுத்துக் கொடுத்து அதனால் வரும் வருவாயால் தன் படிப்பை முடித்தார்,

உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சிபெற்றதும் கல்லூரிக்குப் போகத் தயாரானார். படிப்பு உயர்ந்ததுபோலவே, கைத்தொழில் முறையும் உயர்ந்தது. சிறிய சலவைச்சாலை (லாண்ட்ரி) உண்டாக்கி அதில் வேலைசெய்து, அதனால் வரும் கூலியைக்கொண்டு கல்லூரிக்குள் நுழைந்தார். எந்த வேலை கிடைத்தாலும தயங்காது செய்துமுடித்து, அன்றாடக் கூலி வாழ்வினராக மூன்று ஆண்டுகள் கல்லூரியில் படித்தார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், உழவுத்தொழில் ஆராய்ச்சிக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் படித்தார். சிறுவயதிலிருந்தே பண்ணைத் தொழிலும், செடிகொடிகள் வளர்ச்சியும் நன்றாகத் தெரிந்திருந்ததால் உழவு முறைக் கல்லூரியில் கார்வர் சிறந்தவராக விளங்கினார்.

உயர்தர படிப்பு முடிந்ததும் 1896-ல் அலபாமா பகுதியிலுள்ள டச்கிசீ என்ற இடத்துக்குப் போனார். அங்கு புதிதாகத் துவக்கப்பட்ட ஆராய்ச்சிக் கழகத்தில் உழவு முறை பற்றி ஆராய்ச்சி செய்ய அவருக்கு அழைப்பு வந்தது. ஆராய்ச்சி செய்து புதிய முறைகளைக் கண்டுபிடிக்க எல்லா வசதிகளும் நிரம்பிய ஆய்வுக்கூடமும், புதிய முறைகள் நடைமுறையில் வெற்றிபெறுகிறதா என்பதைக் கவனிக்க பக்கத்தில் பண்பட்ட நிலமும் உழவுத் தொழில் ஆராய்ச்சிக்குத் தேவை. கார்வருக்குக் கிடைத்தவை காலியான சிறு கட்டிடம், அதைச்சுற்றி காடாரம்பமான 16 ஏக்கர் நிலம். வசதிக்குறைவால் கார்வர் என்றும் தளர்ச்சியடைந்ததில்லை. தன் முயற்சியால் நிலத்தைப் பண்படுத்தி, ஆராய்ச்சி சாலையை உண்டாக்க முற்பட்டார். கார்வரும் அவரது மாணவர்களும் பகலெல்லாம் சுற்றி குப்பை, கூளம், சருகு, தழை, வண்டல் மண் முதலியவற்றைக் கூடையிலும், வாளியிலும் தூக்கிவந்து ஆராய்ச்சிப் பண்ணையில் சேர்த்தார்கள். மண் கிளரப்பட்டு உரம் கலக்கப்பட்டு, நிலம் பண்படுத்தப்பட்டது. தரிசு நிலத்தைத் தயாராக்கியதும், ஆராய்ச்சி சாலை உண்டாக்குவதில் கார்வர் முனைந்தார். அதற்கு வேண்டிய கண்ணாடிக் குழாய்கள், நுணுக்கமான அளவுக் கருவிகள், உதவிச் சாமான்கள் முதலியவைகளைப் பெற வேண்டுமானால் வியாபாரக் கம்பனிகளில் பெரும் பொருள் கொடுத்து வாங்கவேண்டும். முடியாத காரணத்தால் கார்வர் தானாகவே ஆய்வுச் சாமான்களைத் திரட்ட முற்பட்டார்.

ஊரிலிருந்த குப்பைமேடுகள் கிளரப்பட்டு, சிதைந்த கோப்பைகள், பீங்கான், உடைந்த பாட்டில், மைக்கூடு, தகரக்குவளை, மண்வட்டா, மரத்துண்டுகள், அனைத்தும் சேகரிக்கப்பட்டன. மற்றவர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட பொருள்கள் கார்வர் ஆராய்ச்சி சாலையில் ஆய்வுச்சாமான்களாக மாறின.

கொலம்பசின் பயணம்போல, கார்வரின் ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று. களிமண் நிரம்பிய அந்தப் பக்கத்து மண் அவரால் ஆராயப்பட்டது. அந்த மண்ணிலேயே அதிகமான பருத்தி விளைவைக் காட்டக்கூடிய முறையைக் கண்டுபிடித்தார். அங்கிருந்த உழவர்களுக்கு இலாபகரமான முறையை விளக்கியதுடன், எல்லோரும் பிரமிக்கத்தக்க அளவுக்குத் தன் ஆராய்ச்சிப் பண்ணையில் அளவுகடந்த பருத்தி விளைவைக் காட்டினார். அத்துடன் உருளைக் கிழங்கு பயிரிடும் வகையில் பலத்த மாறுதலை உண்டாக்கினார். அதுவரை ஆண்டுக்கொரு முறைதான் உருளைக்கிழங்கு விளைவு எடுக்கப்பட்டது. அதை மாற்றி ஆண்டுக்கு இருமுறை விளைவு காணும் வகையை உழவர்களுக்கு விளக்கினார். இதனால் உழவுத்தொழில் வளமுள்ளதாகி, பாலைவனம்போன்றிருந்த நிலங்களில்கூட பலன்கொடுக்கும் வகையில் தொழில் முறை வளர்ந்தது. “என்னைப் பார்க்கும் ஒவ்வொருவரும் இப்பக்கத்து மண் வளப்பமுடையதல்ல என்று கூறுகின்றனர். ஆனால் எனக்குக் கிடைத்தது இந்த நிலம் தான். உபயோகத்துக்கு உதவாத மண் என்று கூறுவது தவறு. உபயோகப்படுத்தப்படாத மண் என்றுதான் கூறவேண்டும்” என்று கார்வர் பின்னொரு முறை கூறினார். தென் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கார்வர் ஆராய்ச்சிகளால் இன்றைக்கு பருத்தி, புகையிலை, உருளைக்கிழங்கு, வேர்க்கடலை முதலியன பலன் தரும் பயிர்களாகிவிட்டன.

உழவுத்தொழிலில் விளைந்த பல பயிர்வகைகளை ஆராய்ந்து, ஒவ்வொன்றும் கணக்கிலடங்கா வழிகளில் உதவும் என்பதைக் காட்டினார். உருளைக் கிழங்கை ஆராய்ச்சிசெய்து, அதி லிருந்து, மாவு, புளிப்பு ரசம், கொழுப்புப்பசை பலவித வண்ணங்கள், உர வகைகள் முதலி நூற்றுக்கு மேற்பட்ட பொருள்களை உண்

டாக்கினார். உழவர்களால் மிகக் குறைவாகக் கருதப்பட்ட வேர்க்கடலைமீது கார்வரின் கவனஞ் சென்றது. அதிலிருந்து 300 உபயோகங்களைக் கண்டுபிடித்தார். வேர்க்கடலையிலிருந்து காப்பி, வெண்ணெய், பால் சத்து, அச்சுக்கூட மை, மாவுப்பொருள்கள், மருந்து எண்ணெய்கள், தாள் வகைகள், இயந்திரங்களுக்கிடும் கொழுப்பு முதலியவை கார்வரால் எடுத்துக் காட்டப்பட்டன. கல்லைத்தொட்டு கனியை வரவழைக்கும் வேடிக்கைக்காரனைப்போல, கார்வர் பல வினோதங்களைச் செய்துமுடித்த வண்ணம் இருந்தார்.

உபயோகமற்ற பொருள்—கார்வர் அகராதியில் அந்தச்சொல் கிடையாது. மற்றவர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட ஒவ்வொன்றிலிருந்தும் நூற்றுக்கணக்கான உபயோகங்களைக் காட்டினார். தென் ஐக்ய நாடுகளில் பைன்மரம் அதிகம். அது உபயோகத்துக்குப் பயன்படாதது என்று ஒதுக்கப்பட்டிருந்தது. காகிதம் செய்வதற்கு அந்த மரத்தையே உபயோகப்படுத்தலாம் என்று செய்துகாட்டினார். இந்தத் தொழில்தான் இன்று தென் ஐக்கிய நாடுகளின் வளப்பமான தொழிலாகிவிட்டது. மரத்தைச் செதுக்கும்பொழுது கீழே விழுகிற மரத்துண்டுகளையும், மரச்சுருள்களையும் கூட கார்வர் விடவில்லை. அவற்றை செயற்கை பளிங்கு செய்வதில் உபயோகப் படுத்தினார். பருத்தி தட்டைகள், வைக்கோல், மரத்தூள் இவைகளிலிருந்து பரப்புள்ள பலகைகள் செய்துகாட்டினார். காட்டுப் பூக்களிலிருந்து மெல்லிய காகிதங்கள் செய்தார்.

உணவுப் பொருள்களைச் சம்பாதிப்பதில் அதிகம் கவலைப்படவேண்டியதில்லை. ஒவ்வொருவருக்கும் வேண்டிய அளவுக்குமேல், கூப்பிடு தூரத்துக்குள் படர்ந்திருக்கும் செடிகொடிகளிலேயே உணவை எடுத்துவிடலாம் என்று கார்வர் நம்பினார். அவர் தான் சொன்னதை நிரூபிக்க ஊரில் கிடைத்த செடி கொடிகளைக்கொண்டுவரச்சொன்னார். உபயோகப் படாதென்று மிதிக்கப்பட்ட செடிகளும், பாதையோரத்தில் கவனிப்பாரற்று கிடந்தக் கொடிகளும், வயற் பக்கத்திலும் வேலியோரத்திலும் படர்ந்திருந்தவைகளும் கார்வர் முன் வைக்கப்பட்டன. அவைகளைக் கொண்டு உயர்தரமானவிருந்து உண்டாக்குவதில் கார்வர் ஈடுபட்டார். சுவைமிக்க சூப்வகைகள், வெண்ணெய், தித்திக்கும் தின்பண்டங்கள் இன்னும் பல உணவுப் பண்டங்களாக சுவையும் சத்தும் குறையாதவகையில் அவற்றை மாற்றினார். தான் கண்டுபிடித்த உண்மைகளை புது முறைகளையும் அனைவருக்கும் உபயோகப்படும்படி, அச்சிட்டு நாடெங்கும் இலவசமாக வழங்கினார்.

கார்வரின் கருத்தைக் கவர்ந்தவர்கள் உழவர்களே. அவர்கள் நல்ல பலனடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் கார்வர் உழவு முறையில் சலியாது உழைத்து, பலவித லாப முறைகளைக் கண்டுபிடித்தார். அவற்றை உழவர்களுக்கு விளக்குவதற்காக, ஒரு வண்டியில் கண்காட்சிப் பொருள்களையும் படங்களையும் ஏற்றிக்கொண்டு, ஒரு குதிரையை இரவல் வாங்கி கிராமந்தோறும் சுற்றினார். ஒவ்வொரு கிராமத்திலும் பயிர்த்தொழிலிலுள்ள குறைபாடுகளை நீக்கும் வழியை விளக்கினார். கார்வர் கையாண்ட சுற்றுப்பிரயாண விளக்க முறை பயனளித்தது. இன்று அமெரிக்காவிலுள்ள உழவுத்தொழில் பிரசார இலாக்காவிற்கு அடிப்படையாக கார்வரின் 'சுற்றுப்பிரயாண' கண்காட்சி முறை அமைந்தது.

பொழுது போக்குக்காக கார்வர் ஓவியம் தீட்டுவார். அவரால் தீட்டப்பட்ட ஓவியங்களை இன்றும் மதிப்புடன் பார்க்கின்றனர். அதில் கூட கார்வர் தம் விஞ்ஞான அறிவை உபயோகப்படுத்தினார். ஓவியத்துக்கு வேண்டிய வண்ணங்களை தனக்குக் கிடைத்த ஒருவகை களிமண்ணிலிருந்து உண்டாக்கிக்கொண்டார். ஆச்சரியமானது. களிமண், அதிலிருந்து வானவில்லில் காணப்படும் வண்ணங்களை உண்டாக்கினார். மற்றொரு இடத்திலிருந்து வந்த களிமண்ணிலிருந்து துணிக்கு இடும் அழகிய சாயவண்ணங்களையும், முகத்தில் தடவிக்கொள்ளும் முகப்பவுடரும் செய்தார்.

அவருடைய ஆராய்ச்சிகள் பெருகிக்கொண்டே போயின. புக்ழ்பெற்ற விஞ்ஞான அறிஞர் ஆல்வா எடிசன் தம்முடன் வந்து, ஆராய்ச்சிகள் நடத்துமாறு அழைத்தார். அலபாமா நாட்டு உழவர்களுக்கு உபயோகமாக அவர்கள் மத்தியிலேயே வாழ விரும்பியதால் கார்வர் எடிசனின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இளம்பருவத்தில் வயிறு வளர்க்கவும், கல்வி பயிலவும் காசுக்குத் திண்டாடிய கார்வருக்குப் பணம் ஏராளமாக வந்தது. அதைப்பற்றி அவர் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. யார் உதவி கேட்டாலும் கைம்மாறு கருதாமல் உதவி செய்தார். உழவர்களைக்கண்டால் வலிய அழைத்து யோசனைகள் சொல்லுவார். அவருக்குக் கொடுக்கப்பட்ட சம்பள செக்குகள், அவரை அறியாமலே அவருடைய பாங்குக் கணக்கில் ஏறிக்கொண்டிருந்தன. இறந்துபோவதற்கு சிறிது காலம்

முன்வரை அப்பணத்தை இவர் உபயோகிக்கவேயில்லை.

வேர்க்கடலை எண்ணெயிலிருந்து பாரிச வாதத்துக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து எண்ணெயைக் கண்டுபிடித்தார். உரிமை பெற்று தாமே வைத்திருந்தால் கோடிக் கணக்கில் பொருள் திரட்டியிருக்கலாம். புதிய மருந்து எண்ணெயைக் கண்டுபிடித்ததும் லாபத்தைக் கருதாமல் உபயோகத்தை மதித்து மருத்துவதுறையினருக்கு இலவசமாக வழங்கிவிட்டார். பலன்தரும் மரங்களில் கேடுவிளைத்த பிணியை ஒழிக்கும் முறையை உற்பத்தியாளருக்குக் கண்டுபிடித்துத் தெரிவித்தார். கார்வர் முறை வெற்றியடைந்தது. அதை மெச்சி, கார்வருக்கு ஏராளமான பணத்தை சொந்தக்காரர்கள் பரிசாக அனுப்பினார்கள். அதை வாங்க மறுத்துத் திருப்பி அனுப்பிவிட்டார்.

மற்றொரு முறை வேர்கடலை மேலே நாட்டிலிருந்து செயற்கை பளிங்கு செய்யும் முறையை தூரத்திலிருந்த தொழிற்சாலையொன்றுக்கு அளித்தார். தொழில் முறையில் சரியாக வராததால், தொழிற்சாலையில் பெரும் பங்குதாரராக தொழிற்சாலை இருக்குமிடத்துக்கு வந்துவிடும்படி கார்வரை அழைத்தனர். கார்வர் மறுத்துவிடவே, கார்வர் இருக்குமிடத்துக்கே தொழிற்சாலை மாற்றப்பட்டுவிட்டது. அவருடைய ஆலோசனையில் தொழில் நடந்தது. ஆலோசனைக்கு ஊதியம் எதுவும் பெற மறுத்துவிட்டார் என்பதைக் கூறவேண்டியதில்லை.

1939-ல் விஞ்ஞானத் துறையில் சிறந்த ஆராய்ச்சியாளராக ரூஸ்வெல்ட் பதக்கம் கார்வருக்கு அளிக்கப்பட்டது. அப்பொழுது அவருக்கு வயது எழுபத்து ஐந்து. தள்ளாத வயதிலும் அவரது ஆராய்ச்சியும் ஊக்கமும் சிறிதளவும் குறையவில்லை. தான் உழைத்த ஆராய்ச்சித்துறைகளில் மேலும் ஆராய்ச்சிக நடக்கவேண்டுமென்ற பெருந்தன்மையுட வாழ்நாள் பூராவும் சேர்த்த—அல்ல சேர் பணத்தைக்கொண்டு 'ஜியார்ஜ வாஷிங்ட கார்வர் கழகம்' என்று முழுப்பெயரில் கழக நிறுவினார். மூன்றாண்டுகள் கழித்து 19 ஜனவரியில் இறந்தார்.

கார்வர் இறந்தார். அவர் உதவிபெற் வளர்ந்த உழவர்கள் தேம்பினர். இல் கார்வர் இறக்கவில்லை. வரண்ட நிலங்கள் ப கார்வரால் வளமுடையதாக்கப்பட்டன. அவ றில் பசும்பயிர் தவழும்போது கார்வரி புன்னகை தவழும் முகத்தை அந்நாட்டு உ வர் பார்க்கின்றனர்.

இரண்டு விளைச்சல், மூன்று நான்கு ப அதிக அறுவடை; அச்சமயங்களில் கார் ரின் அறிவின் முதிர்ச்சியை அன்பின் மு தியை உழவர்கள் உணர்கின்றனர்.

1943 ஜூலையில் கூடிய அமெரிக்க ஐக் நாடுகளின் சபையில் கார்வர் நினைவுச்சின்ன அவர் பிறந்த இடத்தில் அமைப்பதென முடி செய்யப்பட்டது.

குழவியாக—அடிமையாக அவர் மண்ணை தொட்டார். தந்தை இறந்தார், தாய் பிரிக் பட்டாள். தாய்தந்தை யாரென்று தெரியா பெற்றோர் அன்பைப் பெறாத இளமைப் ப வம். கல்வி கற்பதில் பட்ட கஷ்டங்க ஆராய்ச்சி நடத்த முன்வந்தபொழுது இரு வசதிக் குறைவுகள் இவைகளைத் தாங் கொண்டுதான் நீக்ரோ ஒருவரால் கார்வா வரமுடிந்தது. கைம்மாறு கருதாது உலகுக் உழைத்த உத்தமர்களில் கார்வரும் ஒரு அவருடைய பெயர் நிலைபெற்றுவிட்ட சூழ்ந்திருந்த ஏழை உழவரிடம் அவர் காட் அன்பு மறக்க முடியாது. அவருடை உழைப்பு அழியாச் சின்னமாகிவிட்டது.

SANKARAN PROGRESSIVE TUTORIALS
TIRUCHI
S.P.T.
SANKARAN
PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P. O., TIRUCHIRAPALLI.

சங்கரன் முன்னேற்ற தனி
பயிற்சிக்கூடம்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங்
பரிட்சைகளுக்கு மாணவர்களுக்கு
பயிற்சி அளிக்கப்படும்.



பனிவெளியில்

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலா பேசும்பொழுது, அவள் கண்களில் நீர்த்துளி படர்ந்தது.

"இன்னும் ஒருவாரங்கழித்து வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்! அதற்குள் நான் வந்துவிடுவேன்!" குலசேகரன் சொன்னான்.

"வழக்கைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சிறைத்தண்டனை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எல்லாம் ஒன்றேதான். உலகமே ஒரு பெரிய சிறையாகிவிட்டது. அதில் அனுபவித்துத் தீரவேண்டிய கடுந்தண்டனையாக வாழ்க்கையாகிவிட்டது."

யாருக்கு இந்த வேதாந்தமெல்லாம் வேண்டும் என்று குலசேகரனுக்குத் தோன்றியது. அவள் பேசுவதைக் கேட்டதும், கோர்ட்டில் கமலநாதன் சொல்லிய குற்றச்சாட்டு மறுபடியும் கவனத்துக்கு வந்தது. பையில் கையை வைத்தபொழுது, அதில் கிடந்த காகிதத் துண்டுகள் விரல்களில் பட்டது. நெருப்பைத் தொட்டவன்போல, கையை மீண்டும் குலசேகரன் வெளியே எடுத்துக்கொண்டான். அந்த இடத்தைவிட்டுச் சீக்கிரமாக வெளியேறி, பையில் பாரமாகக் கிடக்கும் காகிதத்துண்டை, முன்பின்னறியாமல் முதலில் எழுதிய காதற் கடிதத்தைக் கிழித்தெறிந்து, தீயில் போட்டுவிட வேண்டும் போலிருந்தது.

"நான் போய்வருகிறேன்! ஏதாவது சொல்லவேண்டுமென்றால், டாக்டர் தங்கத்திடம் சொல்லுங்கள்; எனக்கு அவள் சொல்லிவிடுவாள்!" என்று குலசேகரன் கிளம்புவதற்குத் தயாரானான்.

"சொல்வதற்கு எதுவும் இல்லை. மீண்டும் எனது நன்றி! தாங்கள் செய்த உதவிக்கு... நீங்கள்..." சகுந்தலா மேலே சொல்லமுடியாமல் நிறுத்திக்கொண்டாள். கடிதத்தைப் பற்றிச் சொல்லப்போகிறாள் என்று குலசேகரன் நினைத்தான். இதுவரை அடக்கிவைத்திருந்த கோபம் அவன் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. அவள் இப்பொழுது தாழ்ந்த குரலில் நன்றிமொழிகளைப் பசப்பினாலும், எவ்வளவு ஏமாற்றுக்காரியாக இருக்கிறாள்.

"நீ ஏன் எல்லாவற்றையும்—நடந்தவற்றையெல்லாம் எங்களிடம் சொல்லவில்லை?" குலசேகரனின் கண்களில் கோபமும் கடுமையுமிருந்தன.

"எல்லாவற்றையும் சொல்ல நினைத்தேன்—சொல்ல இருந்தேன். ஆனால் முடியவில்லை!"

"முடியவில்லை—ஆதலால் மற்றவர்களை ஏமாற்றவேண்டியிருந்தது" குலசேகரன் குரல் ஆத்திரத்துடன் ஒலித்தது. ஏமாற்றப்பட்டவர்களில் அவன் முதலாவதாக இருந்தான்.

"இல்லை, இல்லை! நான் யாரையும் ஏமாற்றவில்லை. என்னை நானே ஏமாற்றிக்கொண்டேன்! என்னுடைய பழைய கதையை முழுவதும் சொல்லிவிட ஒவ்வொரு தடவையும் தயாராயிருந்தேன், உண்மையைச் சொல்லவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல. உண்மையைப்பற்றி கவலைப்படுபவர்கள் உலகில் மிகச்சிலர்தான் இருப்பார்கள். மிகப்பலருக்கு உண்மை தேவையில்லை—உண்மை பயங்கரமான உருவமுடையது. நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன்—மிகுந்த ஆதரவுடன் என்னிடம் நடந்துகொள்ளும்பொழுது, 'இவ்வளவு ஆதரவுக்கு—அன்புக்கு நான் உரியவளல்ல' என்று, என்மீது நானே குற்றஞ்சாட்டிக்கொள்ளத்தோன்றும்," சகுந்தலாவின் குரல் வரண்டிருந்தது.

" ஆனால் வெளித்தோற்றத்தில், ஒன்றுமே தெரியாத அப்பாவியைப்போல நடிக்கத் தோன்றியது."

சகுந்தலா மெதுவாகச் சிரித்துக்கொண்டாள். " தான் செய்த குற்றத்தைச் சொல்ல வேண்டுமென்றால் எதிர்ப்படுகிற எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருக்கமுடியாது."

" ஆமாம். அதை மறந்துவிட்டேன்." குலசேகரன் ஏளனத்துடன் சொன்னான்.

" ஆனால், எல்லாவற்றையும் — நடந்தவற்றை அப்படியே சொல்ல முன்வரும்பொழுது. இருவரும் தயாராயிருக்கவேண்டும், சொல்பவர்—கேட்பவர் இருவரும்."

" நான் இந்த வழக்கை ஏற்றுக்கொண்டபொழுது. நானும், தங்களும் உங்களைக் கேட்டோம். ஒன்றுமே சொல்லவில்லை."

" இன்றுகூட, வழக்கில் சம்பந்தப்பட்டதால்—கோர்ட்டில், என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ள நான் தயாராயில்லை."

" ஆனால் பின்பு நான்..." குலசேகரனின் கை பையிலிருந்த கடிதத்தை நன்றாகச் சுருட்டிக்கொண்டிருந்தது.

" புரிகிறது. உங்களிடமிருந்து கடிதம் வந்தபொழுதுதான், நான் எல்லாவற்றையும் சொல்லிவிடத் தயாரானேன். அதற்கு மேலும் தாமதிப்பது கூடாதென்று எனக்குத் தோன்றியது. அதற்கு வழக்கு குறுக்கிட்டது. கோர்ட்டில் குற்றச்சாட்டு உருவாகியது. இப்பொழுது எல்லாம் ஒரு கடைசி நிலைக்கு வந்துவிட்டன. ஒரு வாரத்திற்குப் பின் வழக்கு வந்ததும், நான் என் முழுக்குற்றத்தை ஒப்புக்கொள்வேன். இந்த வழக்கு நான் கடலில் விழப்போனதைப்பற்றி—அந்த அளவுக்கு, பிறகு எவ்வளவு தண்டனையோ அதை ஏற்றுக்கொண்டு போய்விடுவேன். அப்புறம் உங்கள் எவருக்கும் தொந்தரவு இருக்காது. சகுந்தலாவின் ஈனக்குரல் குலசேகரனிடம் இரக்கவுணர்ச்சியை பிரதிபலித்தது. ஆனால் அவள் குற்றவாளி—இரக்கங்காட்டுவது நல்லதல்ல என்று தோன்றியது.

" நின்றுகொண்டிருக்கிறீர்களே, சற்று அமருங்கள்! கடைசி முறையாக நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சொல்லுவதுபோல்—நான் யாரையும் ஏமாற்றவில்லை—அதிலும் தங்களை ஏமாற்றவேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை."

குலசேகரன் பக்கத்தில் இருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். சகுந்தலா சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். பின்னால் வைக்கப்பட்டிருந்த தலையணை நழுவி, அவள் முகத்தை மறைத்தது. அவள் பேசும்பொழுது, அவளுடைய குரல்மட்டும்தான் கேட்டது. குலசேகரன் பேசாமல், வெளியில் அசைந்துகொண்டிருக்கும் மரத்தின் இலைகளைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

" அது நடந்தது—என் வாழ்க்கையின் துயரக்கட்டம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் கூட ஆகவில்லை.

என்னுடைய ஊர்—அந்தப் பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள் — தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமுமில்லை. சிறிய ஊர்—செங்கற்பட்டிலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ளது. எனது அப்பா, அம்மா நான் குழந்தையாயிருந்தபொழுதே இறந்துவிட்டார்கள். நான் வளர்ந்துவந்தது, என் சிற்றப்பாவீட்டில். அந்த ஊர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தேன். கிடைத்த சம்பளம்—முப்பத்தைந்து ரூபாய் என்னுடைய சிறு செலவுகளுக்குப்போக, என் சிற்றப்பா வீட்டுக்கும் உதவியாயிருந்தது. எவ்விதக் கஷ்டமும் எனக்குத் தெரியவில்லை—வாழ்க்கை அப்படியே தொடர்ந்திருந்தால்...!

எங்களுடைய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் ஒரு பஜனைமடம். வெகுகாலமாகப் பூட்டப்பட்டுக்கிடந்தது. ஆனால் ஒருநாள் மாலை நான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும்பொழுது. அந்த மடம் திறக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, தோரணங்கள் கட்டப்பட்டிருந்தது. அந்த ஊரில் அத்தகைய சிறு மாறுதல் எல்லோராலும் கவனிக்கப்படும் மாபெரும் சம்பவமாகும்.

மறுநாள் வரும்பொழுது அந்த மடத்தில் பாட்டுப்பாடும் சத்தம் கேட்டது. மடத்து முன்பக்கத்தில் கூட்டம்—அந்த ஊரில் கூடத்தகுந்த கூட்டம் இருந்தது. யாரோ ஒருவர் காலட்சேபம் செய்வதாகச் சொன்னார்கள். மிகக் கணீரென்ற குரலில் காலட்சேபம் செய்பவர் பாடிக்கொண்டிருந்தார். நான் நின்று கேட்கமுடியவில்லை. மெதுவாக நடந்து கேட்டபடி போனேன்.

முதல் நாளிருந்ததைவிட மறுநாள் அதிகக் கூட்டம்—என்னுடைய சின்னம்மாகூட அந்தக் காலட்சேபத்துக்குப் போய்வந்து மிக நன்றாக இருந்ததென்று சொன்னார்கள். நாள் தோறும் அவர்கள் போய்வந்தார்கள். எனக்கிருந்த வேலையில்—நான் போகக்கூடவில்லை.

பள்ளிக்கூடத்துக்குப் போகும்பொழுதும், திரும்பும்பொழுதும், அந்த மடத்தைத் தாண்டிதான் வரவேண்டும். மாலையில் வரும்பொழுது, கூட்டமும் சத்தமும் அங்கிருக்கும். காலையில் யாரும் இருக்கமாட்டார்கள், சந்தடியற்று இருக்கும். ஆனாலும் காலையில் நான் அந்த மடத்தைக் கடந்தபொழுது நாள்தோறும் ஒருவர் நின்று உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். தெருக்கோடி திரும்பும்பொழுதே அவர் நின்றுகொண்டிருப்பது தெரியும். அவர்தான் அந்த மடத்தில் காலட்சேபம் செய்பவர் என்று சொன்னார்கள். தவறாமல் நாள்தோறும், அந்த இடத்தில் அவர் நின்றுகொண்டிருப்பார். நான் பள்ளிக்கூடத்துக்கு வரும் குழந்தைகளுடன் போகும்பொழுது, மடத்துப் பக்கம் பார்க்காமல் வேறுபக்கம் போய்விடுவது வழக்கம்.

ஒருநாள் சின்னம்மாள் காலட்சேபத்துக்குப் போகும்பொழுது கட்டாயப்படுத்தி என்னையும் அழைத்துக்கொண்டு போனார்கள். வேண்டா வெறுப்புடன் போனேன்—அங்கு கூடுகிற கூட்டமும்—அங்கு வருபவர்கள் செலுத்துகிற பார்வையும்—வேண்டாதவை தானும். ஆனால் காலட்சேபம் நன்றாக இருக்கும்—இருக்கிறது என்றதால் நான் போனேன்.

நாங்கள் போனபொழுது காலட்சேபம் செய்பவர்—வெளியில் எழுதியிருந்த பலகையில், முருகபக்தர் குமரதாசர் என்று பெயர் போடப்பட்டிருந்தது—முதல் பாட்டைப்பாடிக்கொண்டிருந்தார். பாட்டு முடிந்ததும், நிற்பவர்கள் உட்கார்ந்தார்கள். பெண்கள் உட்கார்ந்திருந்த பகுதியில்—அங்கிருந்த கூட்டத்தில் அதிக உற்சாகத்துடன் இருந்தவர்கள் பெரும்பாலும் பெண்களாகத்தான் இருந்தார்கள்—அங்கு நாங்களும் அமர்ந்தோம். அன்று முருகப்பெருமான் சிறுவனாக இருந்த பருவத்தைப் பற்றி அவர் காலட்சேபம் செய்தார். காலட்சேபத்தில் இடையிடையே, தேவாரத்தில் ஒரு அடி, திருப்புகழில் ஒரு பாட்டு, மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழில் சில பாட்டுகள் இப்படி பாட்டுகளைப் பாடினார். அவருடைய பாட்டில் இனிமையும், குளிர்மையும் இருந்தது, ஆறுமுகக் கடவுளைச் சிவபெருமானும், உமையாளும் கொஞ்சுதலும், சிறுவனாக இருக்கும்பொழுதே பிரமனுக்குத் தெரியாத பிரணவ மந்திரத்தை முருகப்பெருமான் உபதேசித்ததும், பிறகு தந்தைக்கே ஆசிரியராகி இருந்து தகப்பன் சாமி—ஆறுமுகக்கடவுள் சொல்லிக்கொடுத்தலும், அழகாக விளக்கப்பட்டன, பாட்டு, தாளம், அபிநயம் முதலியவற்றால்.

அந்தக் காலட்சேபத்தில், ஈடுபட்டு எல்லோரும் மெய்மறந்தே இருந்தார்கள். இடையிடையே காலட்சேபம் செய்பவர் தரும் வேடிக்கை பேச்சுகள் கூட்டத்தைச் சிரிக்க வைத்தது. பாட்டு வசிகரமாயிருந்தது, பேச்சு கணீரென்று இருந்தது. மற்ற காலட்சேபம் செய்பவர்களைப்போல வந்ததைச் சொல்லிக் கதையை முடித்துவிடாமல், இந்த குமரதாசர் நிறுத்தி, நிதானமாக பாட்டுக்களைப் படித்தார். ஒவ்வொரு அடியையும் ரசித்து, ரசித்து, பாடினார். அவருடன்கூட சேர்ந்து நாமும் பாடலாமாவென்று கூட்டத்திலிருப்பவர்களுக்குத் தோன்றியது.

இரண்டுநாள் கழித்து, காலைப் பள்ளிக்கூடத்தில் நான் எனது வகுப்பை நடத்திக்கொண்டிருந்தேன். பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் வகுப்பிற்கு வந்தார். அவர் பின்னால் காலட்சேபம் செய்யும் குமரதாசர் வந்தார்.

"பிள்ளைகளே! இந்தப் பெரியவர்—சிவனடியார்—முருபக்தர் உங்களை ஆசிர்வதிக்க வந்திருக்கிறார்! எல்லோரும் முதலில் வணக்கம் செலுத்துங்கள்!" என்று தலைமையாசிரியர் மாணவர்களுக்குக் கட்டளையிட்டார். எழுந்துநின்ற மாணவர்கள் தலைகுனிந்து வணங்கினார்கள்.

"குழந்தைகளே! சிவச்செல்வங்களே! சகல நன்மைகளும் உண்டாகுக!" என்று அந்த பக்தர் மாணவர்களை ஆசீர்வதித்தார். "இன்று கிருத்திகை; புண்ணியதினம்! முருகப்பெருமானுக்கு உகந்த நாள்! இந்தப் பாட்டை எல்லோரும் நன்றாகக் கேளுங்கள்!" என்று பாட ஆரம்பித்தார்.

"ஏறுமயிலேறிவிளையாடும் முகம் ஒன்றே" என்ற பாட்டை முதலிலிருந்து கடைசிவரைப் பாடி முடித்தார். வகுப்பில் இடையில் வந்து இப்படி நேரத்தைப் போக்குகிறார்களே என்றாலும், பாட்டைக் கேட்கும்பொழுது இனிமையும் பக்தியும் எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று தோன்றியது. உண்மையில் அவர் முருகனுடைய அருள் பெற்றவராகத்தான் இருக்கவேண்டும்.

பாட்டுப்பாடி முடித்ததும், தான் கொண்டு வந்த கற்கண்டுகளை அந்த பக்தர் மாணவர்களுக்கு வழங்கினார். "மாணவர்கள் மிக ஒழுங்காக நடந்துகொள்ளுகிறார்கள். எல்லாம் பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடும், வகுப்பை நடத்தும் ஆசிரியரின் திறமையுமே!" என்று சிரித்துக்கொண்டு அவர் சொன்னார்.

"ஆமாம்! ஆமாம்!" என்று தலைமையாசிரியர்

சிரியர் அந்தப் புகழுரைகளைத் தனக்குரிமை யாக்கிக்கொண்டு போனார்.

வகுப்பறையை விட்டு வெளிக்கிளம்பும் பொழுது, குமாரதாசர், என்பக்கம் திரும்பி, "அன்றைக்குக் காலட்சேபத்துக்கு வந்ததற்குப் பின், நீங்கள் மறுபடியும் வரவேயில்லை!" என்று கேட்டார்.

ஒரு கணம் நான் திடுக்கிட்டுவிட்டேன், முதலாவதாக நான் வந்திருந்ததை அவர் எப்படிக் கவனத்தில் வைத்திருந்தார்? பின் நான் வரவில்லை என்பதை எப்படிக் கண்டார்? ஆனால் நம்மை ஒரு பொருட்டாக மதித்து, அத்தகைய புகழ்வாய்ந்த காலட்சேபக்காரர் என்று ஒரு புறத்தில் பெருமைப்பட்டேன்.

"இல்லை, நேரம் கிடைக்கவில்லை!" என்று தடுமாறிச் சொன்னேன்.

"அப்படிச் சொல்லக்கூடாது! உங்களைப் போன்றவர்கள் பக்திமார்க்கத்தில் அக்கறை காட்டினால்தான் மாணவர்கள் திருந்துவார்கள்! நீங்கள் அவசியம் வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மடத்தில் நடைபெறும் காலட்சேபங்களுக்கு எனது சிறிய தாயாருடன் நானும் போகத் தொடங்கினேன், எங்களுக்கு அந்த குமாரதாசர் காட்டும் மரியாதையும் பரிவும் தனிவிதமாக இருந்தது. ஏதாவது வருணனை, வேடிக்கையான சம்பவம் ஏதாவது சொன்னால், எங்கள் பக்கம்பார்த்து சிரிக்காமல் இருக்கமாட்டார். அப்பொழுது எனக்கும் அது வேடிக்கையாக, சிரிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் அவருடைய சிரிப்பில் அடங்கியிருந்த நச்சுவாடையை என்னால் அப்பொழுது உணர முடியவில்லை.

ஒருமாதம் காலட்சேபம் முடிந்ததும் அவர் ஊரைவிட்டுப் போய்விட்டார், அவ்வளவு சீக்கிரத்தில் போய்விடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. மற்ற எவ்வளவோ இடங்களில் அவருக்குக் காலட்சேபங்கள்—ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் என்று காத்துக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவர் பக்திமான்—அவருக்குப் பணம் வந்து என்ன செய்யப்போகிறார்?

ஒருநாள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களின் கூட்டம் நடந்தது. முடியும்பொழுது, நன்றாக இருட்டிவிட்டது. வீட்டுக்குப் போகவேண்டுமென்று வெளியே வந்தேன். மழை தூறிக் கொண்டிருந்தது. மழை வருமென்று எதிர் பார்க்காததால் நான் குடையெதுவும் எடுத்து வரவில்லை. போய்விடலாம் என்று நான் நடக்க ஆரம்பித்தேன். மழை வலுக்க ஆரம்பித்தது. அதிகம் நனைந்துவிடுமென்று, பக்கத்திலிருந்த மடத்தில் போய் ஒதுங்கி நின்றேன். மழை பலமாகப் பெய்துகொண்டிருந்தது. எப்படி வீட்டுக்குப் போகமுடியும் என்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன்.

"ஏன் இப்படி மழையில் நனைந்துகொண்டிருக்கிறீர்கள்? உள்ளே வந்து தங்கலாமே!" என்று பின்னாலிருந்து அழைப்பு வந்தது. திரும்பிப் பார்த்தேன். குமாரதாசர் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தார்.

(தொடரும்)



விழா அமைத்த பாதை

[செல்வன்]

முத்தாயி மகன் மருதன் பட்டாளத்திலிருந்து திரும்பியதும், சிப்பாய் உடைகளை அணிந்துகொண்டு தன் கிராமத்தில் சுற்றி வருவது வழக்கமாகிவிட்டது. காக்கிச்சட்டை, சிகப்புக்குல்லாய் இவற்றுடன் கடைவீதியில் மருதனைக் கண்டவர்களுக்கு, காளிகோயிலுக்கு எதிர்ப்புறம் 'கைரேகை பார்க்கப்படும்' என்று ஒரு அட்டையில் எழுதிவைத்துக்கொண்டு இரண்டு மூன்று ஏட்டுப் பிரதிகளை விரித்து வைத்துக்கொண்டிருக்கும் 'ஜோசியர் ஐயாவின்' நினைவும் தொடர்ந்து வரும். நாட்டு மக்களின் விதியை நிர்ணயிக்கும் சிப்பாய் இருக்கையில் இவர் எதற்கு என்ற எண்ணமோ என்னவோ!

சண்டை முடிந்து வீட்டிற்குத் திரும்பும் பொழுது, அவன் சேவையை மெச்சி அரசாங்கம் அவனுக்களித்த கொஞ்சம் பணம், அவனுக்கென ராணுவத்தில் அளிக்கப்பட்ட காக்கிச்சட்டை, கருப்புப் பூட்ஸ், சிகப்புக்குல்லாய் இவைகள் தான் அவனுக்கிருந்த செல்வம். பட்டாளத்தில் பணியாற்றினும், பட்டி தொட்டிகளில் வேலைசெய்யலாமா என்ற 'சட்டுக்கௌரவம்' இவற்றுடன் கிராமத்துத் தெருக்களில் வலம்வரும் அவனைக் காண கிராமத்து இளம் பெண்கள் ஆவல்கொண்டதில் வியப்பில்லை. கடைத்தெருவுக்கும், வேலை வெட்டி செய்யவுமாகக் கிளம்பும் இளம்பெண்கள், தங்களைச்சுற்றி ஈக்கள்போல மொய்த்து வழக்கமாக வரும் வாலிபர்களைச் சட்டை செய்யாது மருதனை தங்கள் ஓரக்கண்களால் பார்த்துப் பூரித்துப்போவது வழக்கம்.

மருதன் தன் பட்டாளத்து அனுபவங்களைக் கொஞ்சம் மிகைப்படுத்திப் பெருமையுடன் கிராமத்தவர்களுக்குச் சொல்வான். வாய் எதை சொல்லிக்கொண்டிருக்கும், கண்கள் மாத்திரம் எங்கோ, யாரையோ எதிர்பார்ப்பது போல் தேடிக்கொண்டிருக்கும். பாவம்! அவன் எதிர்பார்த்த 'அவள்' வரவேயில்லை. செல்லிக்குக் கல்யாணம் பேசிமுடித்துவிட்டார்கள். மாப்பிள்ளை கருப்பன்; கொஞ்சம் பசையுள்ளவன். தன் தகப்பன் விட்டுச்சென்ற காணிநிலத்தையும், கடையையும் வைத்து நன்றாகப் பராமரித்துவந்தான். தான் எதிர்பார்த்த செல்லி வராததன் காரணம் புரிந்துவிட்டது மருதனுக்கு, இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் மருதனின் உள்ளம் கொதித்தது. கருப்பனைத் தீர்த்துக்கட்டக்கூட முடிவுசெய்துவிட்டான். நல்லவேளையாக அப்படி ஒன்றும் நேரவில்லை.

பட்டாளத்தில் இருக்கும்பொழுது அவன் கற்றுக்கொண்ட சில பாட்டுக்களை செல்லியின் வீட்டிற்கு எதிரில் நின்றுகொண்டு ஒவ்வொரு நாளும் பாடுவான். "தனியாக நின்றுகொண்டு தவளைமாதிரிக் கத்துகிறானே, முத்தாயியிடம் சொல்லி இதற்கு ஒரு முடிவுகட்டவேண்டும்", என்று சொல்லிக்கொண்டனர் ஊர்மக்கள்.

மாமன் வீட்டிற்குச் சென்று திரும்பிவந்த செல்லி தற்செயலாக ஒருநாள் மருதனை வழியில் கண்டாள். சந்திப்பு எதிர்பாராததாக இருந்தாலும் செல்லியின் முகத்தில் ஒருவித பரபரப்பையும் காணவில்லை ஏதோ முன்பின் பழக்கம் இல்லாத ஒருவரைப் பார்ப்பதுபோலவே தோன்றியது.

"செல்லி, ரொம்பநாளைக்கப்பரம் உன்னைப் பார்க்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா!"

"முத்தா! நீ அங்காளம்மன் திருவிழாவுக்கு முந்தியே வந்துவிட்டேன்னு சொன்னாங்க."

"எங்கிட்டக்கூடத்தான் என்ன என்னமோ சொன்னாங்க. ஆமா செல்லி, நீ என்ன அந்தக் கருப்பனைத்தான் கட்டிக்கப்போறியா?"

"நான் என்ன செய்யறது மருதா! நீ தான் பட்டாளத்துக்குப் போயிட்டே; இனித் திரும்பமாட்டேன்னு எல்லாரும் சொல்லி, எனக்கு வயசாச்சு, சீக்கிரம் கட்டிக்கொடுத்துடனும்னு 'அவருக்கு'ப் பேசி முடிச்சுட்டாங்க. கல்யாணத்துக்குத் தேதிகூட வச்சிட்

டாங்க. மருதா! நீ அவசியம் கல்யாணத்துக்கு வருவேல்ல ?''

இந்த வார்த்தைகளை அவள் வாய் கூறியதே தவிர உள்ளம் எதை, எதையோ நினைத்துக் குமைந்துகொண்டிருந்தது. கண்களிலிருந்து கட்டுக்கு மீறி வரும் கண்ணீர்த்துளிகளை அடக்க முந்தானையை இழுத்துத் துடைத்துக் கொண்டாள்.

“செல்லி, எவ்வளவு தொலைவிலிருந்து நான் இதுக்குத்தானா வந்தேன். இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சா பட்டாளத்திலேயே உசிரவிட்டிருப்பனே.'' மருதன் எவ்வளவோ முயன்றுபார்த்தும் முடியாமலே இந்த வார்த்தைகளை உதிர்த்துவிட்டான். உணர்ச்சிப் பெருக்கில் உள்ளம் உடைந்து வார்த்தைகள் வழிந்தோடின. தொண்டை கம்மியது. தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு நின்றான்.

“மருதா! நம்ப ரெண்டுபேரையும் யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க. நான் சீக்கிரம் போகனும்.''

“உண்மைதான். நீ இப்போது கருப்பனைக் கட்டிக்கப்போற. அவனுக்குக் கையில நாலு காசு இருக்கு. ஆனா எங்களுக்கிருந்த கொஞ்சம் காட்டையும் நான் பட்டாளத்திலிருக்கும்போது, அம்மா வித்து வயித்தைக் கழுவிடுச்சு. சின்னஞ்சிறிசிலே நாம் ஆடிப்பாடி விளையாடும்போது, உங்க அம்மாவும், எங்க அம்மாவும் நம்மிருவர் திருமணத்தைப்பற்றியும் பலவிதமாகப் பேசி மகிழ்ந்தனர். நான் வயதுவந்து பட்டாளத்துக்குப் போவதற்கு முதல்நாள். செல்லி! என் வாழ்க்கையில் என்றென்றும் மறக்கமுடியாத அந்நாள். கிராமத்திலிருந்து பட்டணத்துக்குப் போவதற்குப் பாஸ் அனுப்பியிருந்தார்கள் பட்டாளத்தார். என்னையொத்த இளம்வயதினர்கள் வயல்களிலும், வீடுகளிலுமாக உழைத்துக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழும்பொழுது, பட்டாளத்துக்குச் சென்று ‘மேஜராக’ வந்து கைநிறையச் சம்பாதித்து, கண்நிறைந்த வாழ்க்கை நடத்தலாம் என்று கனவுகண்டு, பெருமிதத்துடன் இருந்தேன். நான் செல்ல இருந்த செய்திகேட்டு வந்து என்னைக் கடிந்து செல்லி! நீ சிந்திய கண்ணீரும், வெந்த உன் உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய வார்த்தைகளும் என்றும் என்னால் மறக்கமுடியாது. நான் பட்டாளத்திலிருந்து சீக்கிரமே திரும்பிவந்து உன்னைக் கல்யாணம்செய்து கொள்கிறேன் என்று உறுதிகூறின பிறகு உன் குமுறலும், கொந்தளிப்பும்; சிறிது சிறிதாக அடங்கியது. கடைசியாகப் பிரியும் நேரத்தில் நீ உன்னுடைய மோதிரம் ஒன்றை எனக்கு உன் நினைவாகக் கொடுத்தாயே! பெற்ற தாயையும், பிரியத்துக்குரிய உன்னையும் பிரிந்து சென்ற அந்த இரவு—நீ எனக்களித்த உன் நினைவுச்சின்னம், இவற்றை நினைத்து எங்கோ தொலைதூரத்தில் நம் ஊரையும் கேள்விப்பட்டிராத மக்கள் மத்தியில், உலகின் ஒரு கோடியில் நான் எத்தனை தடவை கண்ணீர் சிந்தியிருப்பேன் தெரியுமா? செல்லி! இன்றிலிருந்து நீ வேறு ஒருவனுக்கு மனைவியாகப்போகிறவள். எனக்கும் உனக்கும் உள்ள சொந்தம், பந்தம் எல்லாம் மாய்ந்து மடிந்து, உருக்குலைந்து, தேய்ந்த கனவாகப்போய்விட்டன. சென்றுவா. செல்லி!''

செல்லிக்கும் கருப்பனுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு செல்லி முன்போலல்லாமல் அடிக்கடி வெளியே சென்றுவருவதால், மருதனுக்கு அவளைப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. என்னதான் அடக்கிப்பார்த்தும் மருதனின் மனம் அடங்கவில்லை. அந்திப்பொழுதில், மருக்கொழுந்தோ, மல்லியோ தலையில்சூடி, இளமையின் எழில்க்கொல்லையாகச் செல்லி இடுப்பில் குடத்தையெடுத்து தண்ணீருக்குச் செல்கையில் மருதனின் உள்ளம் உவகையில் குளித்துப் பின் கொதிக்கும் எரிமலையாக மாறுமளவிற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்த்துப் பெருமூச்செறியும். கருப்பன் செல்லிக்கெனவாங்கிக்கொடுத்த அந்தச் சிவப்புக்கல் மோதிரம். அதைக் காணும்தோறும் மருதனுக்கு என்னவோபோலிருக்கும். பாவம்! மருதன் செல்லியை அறவே மறப்பதற்கு எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. எதிர்பாராமல் அவளைக் காணும் இடத்தில் எல்லாம் செல்லியின் உருவம் அவன் உள்ளத்தில் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாக அவன் உள்ளத்தைத் தின்று கொண்டேயிருந்தது.

“எப்படியாவது செல்லியை அந்தக் கருப்பனிடமிருந்து பிரித்துவிடவேண்டும்'' என்று கருவிக்கொண்டிருந்தான்.

கருப்பனின் வீட்டிற்கு எதிர் வீட்டில் காத்தான் வசித்துவந்தான். கருப்பனளவு காணிநிலம் இல்லாவிடினும், வயிற்றைக்கட்டி வாயைக்கட்டிப் பிழைக்கவேண்டிய நிலையில் இல்லை. ஏதோ கொஞ்சம் இருந்தது. தன் மகள் மாரியம்மாவை கொஞ்சம் பசையுள்ளவனாகப்பார்த்துப்பிடித்துக்கொடுக்கவேண்டும்

என்பது அவன் நீண்டநாள் நினைவு. காத்தானிடம் வேலைக்குச் சேர்ந்துவிட்டான் மருதன். செல்லியின் நினைவால் உள்ளம்வாடி உணர்ச்சியின்றிக்கிடந்த மருதனுக்கு மாரியம்மாவைக் காண்பதில் ஒருவித சாந்தி ஏற்பட்டது. மாரியம்மாவைத் தனியாகச் சந்திக்கும்பொழுது விளையாட்டாக ஏதாவது பேசுவான். உண்மையாகவே மருதன் தன்னைக் காதலிப்பதால் தான் இவ்விதம் எல்லாம் பேசுகிறான் என்று மாரியம்மா நினைத்துக்கொண்டாள். ஆகவே, சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுதெல்லாம் மருதனைத் தனிமையில் சந்திக்கத் தவறுவதில்லை. மருதன் தன் தங்கையுடன் பழகும் நினைப்புடனே தான் மாரியம்மாவிடம் பழகி வந்தான்.

எதிர்வீட்டில் இருந்த செல்லியும் எப்படியாவது மருதனுக்கு மாரியம்மாவை கல்யாணம் செய்துவைத்துவிடவேண்டும் என்று முயன்றாள். இதற்காக அவள் அடிக்கடி மாரியம்மாவைக் கூப்பிட்டு பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் மருதன் மாரியம்மா வீட்டிலிருப்பதால் அவனைப் பார்ப்பதற்குத்தான் செல்லி அங்குச் செல்வதாகவும், மாரியம்மா மூலம் செய்தி அனுப்புவதாகவும் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். "குசுகுசு"வென ஓரிருவர் கண்டும் காணாமலும் பேசிக்கொண்டிருந்த அந்தச் செய்தி அதற்கு உரிய முழுப்பண்புடன் இறக்கை, கால், கை முதலியவை முளைத்து ரெட்டிப்பட்டி கிராமத்து மக்களின் அன்றாடப் பொழுதுபோக்குப் பேச்சாக மாறியது.

மருதனுக்கு மனவேதனை அதிகரித்தது. அதிகம் படிக்கவில்லை அவன். ஆனாலும் படிப்பால் ஏற்படும் அறிவைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான அறிவைப் பெற்றிருந்தான் தன் பட்டாளத்து சேவையினால். பட்டாளத்திலிருக்கும்பொழுது எவ்வளவோ இடங்களுக்குச் சென்றிருக்கிறான். வெவ்வேறு மொழி பேசும் மக்கள், பல்வேறுவிதமான வாழ்க்கையையுடையவர்கள், பலதிறப்பட்ட பண்புள்ளவர்கள் இவர்களுடன் பழகியிருக்கிறான். அங்கெல்லாம் சுற்றித்திரிந்து அவன் கண்ட அனுபவ அறிவு அவன் உணர்ச்சியைக் கொஞ்சம்கூட அடக்க உதவவில்லை.

செல்லிக்கு மணமாகி எங்காவது கண்காணாத இடத்துக்குச் சென்றிருந்தாலாவது மருதன் ஒருவாறு தன் உணர்ச்சியை அடக்கி, மாற்றத்தையும் கொஞ்சம், கொஞ்சமாக அடைந்திருப்பான். செல்லியின் கணவனோ கள்ளம்கபடு அறியாத சின்னஞ்சிறுவயதிலிருந்து மருதனுடன் ஒன்றாக ஓடி ஆடிப் பழகியவன். பள்ளிப்பருவத்தின் பாதியில் இருவரும் தங்கள் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு 'குலத்தொழில்' செய்ய ஆரம்பித்தனர். தன் மூதாதையர் விட்டுச்சென்ற கொஞ்சம் மூலதனம், இடைவிடா உழைப்பு, தொழிலுக்குத்தேவையான சூழ்நிலை இவற்றால் முன்னுக்குவரமுடிந்தது கருப்பனால். ஆனால் மருதனோ என்னதான் உழைத்தும், உழைப்பின் பலனை அப்படியே அனுபவிக்க முடியாது போயிற்று மூலதனம் இல்லாத காரணத்தால். உழைப்பிற்குக் கிடைத்த கூலியோ தன்வயிற்றையும், பத்துமாதம் சுமந்துபெற்றெடுத்த தாயின் வயிற்றையும் கழுவப் போதுமானதாக இல்லை. எனவேதான் பட்டாளத்தில் சேர்ந்தான், பசியார உண்ணும் நோக்கத்துடன்.

கண்ணுக்கெதிரே தான் காதலித்தவள் மற்றொருவனுடன் செல்வதைக் காணுந்தோறும் மருதனின் மனம் ஆத்திர அலைகளால் தாக்கப்பட்டு அலைமோதியது. ஆனால் கருப்பன் எப்பொழுதும்போல் மருதனைக் கண்டால் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். ஊராரின் உறையாடல் கருப்பனின் உள்ளத்தைச் சிறிதளவும் தாக்கவில்லை. ஆனால் மருதனின் மனம் மட்டும் படாதபாடுபட்டது. கருப்பனைப் போல் மனம்விட்டுப் பழக அவனால் முடியவில்லை.

வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி செய்தால் நிறைய லாபம் வரும் என்று கருதி அதற்காக வெங்காயக் கொள்முதலுக்கு வெளியூர் போகவேண்டியிருந்தது. கருப்பன் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்தில் இந்தப் பயணத்தைத் தானே மேற்கொண்டான். மருதனின் மனம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் துடியாய்த் துடித்தது.

ரெட்டியபட்டி 'மஞ்சுவிரட்டு' என்றால் அந்த வட்டாரத்தில் மிகப்பேர்போனது. பட்டணத்தில் 'பொருட்காட்சி', 'கண்காட்சி', 'கலைக் கண்காட்சி' நடப்பதைப்போல ஆண்டுக்கொருமுறை கிராமங்களில் 'மஞ்சுகவிரட்டு' அல்லது 'ஜல்லிக்கட்டு' என்று அழைக்கப்படும் 'மாடுபிடிக்கும்' பந்தயம் நடைபெறும். இந்தப் பந்தயதினத்திற்கு இரண்டுமூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே கிராமங்களில் பேச்சு நடைபெறும். ஊர்ப் பெரியதனக்காரர்கள் ஒன்றுகூடித் தலைக்கு இவ்வளவு, என்று வரிபோட்டு, அத்துடன் ஊர்ப் பொதுப்பணத்

திலிருந்து கொஞ்சம் அதற்கென ஒதுக்கி இந்தப் பந்தயத்தை மிகச் சிறப்பாக நடத்தப் பெரும் நடவடிக்கைகள் எடுப்பது வழக்கம். பந்தயக்காளை வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காளையை நன்ருக வளர்ப்பார்கள். வயதடைந்த வாலிபர்கள் பந்தயக்காளையைப் பிடிப்பதில் போட்டிபோடுவதும் உண்டு. போட்டிக்கு முதல்நாள் காளையின் கொம்புகளைச் கூர்மையாகச் சீவி, எண்ணெய் தடவி, காளைக்குஞ்சம், ஜரிகை முதலியவைகள் கட்டி அழகுபடுத்தி வைப்பார்கள். பந்தயதினத்தன்று இரண்டு நீண்டகயிறுகளை இருபக்கமும் பிடித்துக்கொண்டு, நடுவில் கழுத்து மணியசைய குஞ்சம் காற்றில் அசைந்தாட காதுகளை நிமிர்த்து ராஜநடைபோட்டு வரும் பந்தயக்காளைகளைப் பார்ப்பதற்குச் சிறுவர்கள் ஆவலோடு வீட்டுத் திண்ணையில் வந்து நிற்பார்கள். இந்த நாளைப் பயன்படுத்திக்கொண்டு எப்படியாவது செல்லியைக் கருப்பனிடமிருந்து பிரித்துக்கொண்டு போய்விடவேண்டும் என்று முடிவு செய்தான்.

செல்லிக்கு எதிர்வீட்டில் தனக்காகத் தன்னையே நினைத்து உருகும் மருதனைப் பார்த்துப் பேசி எப்படியாவது மாரியம்மாவை அவனுக்குக்கட்டிவைத்துவிடவேண்டும் என்ற ஆவல். அதற்காக மருதனுடன் தனியாகப் பேசும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். மருதனை அழைத்துவர ஆள் அனுப்பினாள். மருதன் தன்கனவு நனவாகப்போகிறது என்றெண்ணி, எப்படிப் பேசுவது, இங்கிருந்துபோய் எங்கு தங்குவது, வயிற்றுப் பிழைப்பிற்கு என்ன செய்வது என்று சங்கிலித்தொடர்போல் ஒன்றன்பின் ஒன்ருய் வந்த கேள்விகளுக்கு விடைதேடுவதில் ஈடுபட்டான்.

மருதன் வந்ததும் வரவேற்று உபசரித்தாள் செல்லி. நினைப்பெல்லாம் மாரியம்மா, மருதன் திருமணத்தை முடிப்பதைப்பற்றியே இருந்தது. பேச்சென்னவோ 'மஞ்சுவிரட்டு' பற்றி ஆரம்பமாகியது. மருதன் எதிர்பார்த்த வாய்ப்பு கிடைத்துவிட்டது. வழி தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்த அவனுக்குச் செல்லியே வழிதிறந்துவிட்டாள்.

“மருதா எனக்கு ரொம்பநாளா ஆசை, மஞ்சுவிரட்டுப் பார்க்கவேண்டுமென்று. போகலாம் நாம் ரெண்டுபேரும்” என்ருள் செல்லி.

மருதனுக்கு உள்ளூர ஆசை இருந்தாலும், வெளிப்பேச்சுக்காகக் கேட்டான் “ஏன் செல்லி என்கூட வந்தா உன் புருஷன் ஏதாச்சும் சொல்வானு” என்ருன்.

“அதெல்லாம் ஒன்னுமில்லே, மருதா. என் புருஷனுக்கு ரொம்ப நல்லமனசு. நம்மைப்பத்தி ஊரிலே பேசிக்கிறதைக் கேட்டுப்பிட்டு ஒரு நாள் சொல்லிச்சு, ‘பாவம், மருதன் நல்லவன். சின்ன வயசிலே இருந்து என்கூட ஒன்னும் பழகினவன். அவன்மேல் பழிபோடுறாங்க செல்லி, நீ ஊருல சொல்றாங்களேன்னு அவன்கூடப் பேசாம, கீசாம இருந்துடாதே. கண்டா எப்பவும்போல சகஜமாப் பேசிக்கோன்னு’ சொல்லிச்சு.”

“என்ன! செல்லி! கருப்பன் அப்படியா சொன்னான்? உண்மையாகவா?”

“ஏன் மருதா? இப்படிக் கேட்கிற. கிராமத்தான் எப்பப்பாத்தாலும் நீங்க ரெண்டுபேரும் ஒண்ணுச் சுத்திக்கிட்டே இருந்ததைப்பத்தியெல்லாம்கூடச் சொல்லும். உண்மையாகவே உன்மேல ரொம்பப் பிரியம் அதுக்கு” இதைச் சொல்லி முடிப்பதற்குள் மருதனின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. செல்லிக்குத் தெரியாமல் தன் கைகளால் துடைத்துக்கொண்டே “ஆமா, செல்லி கருப்பன்னு எனக்குக் கரும்பு மாதிரி” என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்துவிட்டான். “மருதா, மருதா” என்று செல்லி கத்துவது அவன் காதில் விழவில்லை. வீட்டைவிட்டு வெளியே வந்தான். வீடு, தெருக்கோடி, ஊரின் எல்லை, எல்லாம் கடந்து நடந்துகொண்டே இருந்தான் மருதன்.





(23)

காமத்தீயால் தாக்கப்பட்டு, அக்னிதேவன் யாகக்குண்டத்தில் துடிதுடித்தான். சுற்றிலும் துடியிடையினர் அமர்ந்திருந்தனர், சோர்வில் தலை தாழ்ந்திட, உறக்கத்தில் இமைகள் தாழ்ந்திட, வீசுகின்ற காற்றில் மேலாடை தாழ்ந்திட. அவர்களது கோலத்தைக் கண்டு, அருகிலே தனிமையாக இருப்பதைக் கண்டு, அக்னி காமவெறியடைந்தான்.

யாகத்தைக் காத்துவருபவர்களே சப்த ரிஷிகளின் பத்தினிகள். அவர்கள் ஒவ்வொருவரையும் பார்க்கப், பார்க்க அக்னியின் காம இச்சை அதிகமானது.

முதலில் அத்திரியின் மனைவி அனுசூயா அமர்ந்திருந்தாள். அவளுடைய அழகு தேவர்களையெல்லாம் மயங்கச்செய்ததாகும். ஒருசமயம், மும்மூர்த்திகளே—சிவன், திருமால், பிரம்மா மூவருமே—கிளம்பி, நிர்வாணக் கோலத்தில் அனுசூயையின் அழகைக் காண விழைந்தனரென்றால் கேவலம் அக்னி போன்றவர்கள், அனுசூயையின் அழகை—அந்த இரவில் கண்டு எப்படிப் பேசாமலிருக்க முடியும்.

அனுசூயையின்மீன சாய்ந்துகொண்டு அகலிகை, தீயைப் பார்த்தபடி இருந்தாள். அங்கு இருந்தவர்களில் மிக சொகுசுக்காரி அவள் தான். மற்றவர்கள் பேசுவதைக் காதில் வாங்காமல், அவள் மட்டும் பேசாமல் இருந்தாள். அவள் பார்வையில் ஒருவகை ஏக்கம் இருந்தது. அவள் முகத்தில் புன்னகை அரும்பி மறைந்தது. மனதில் என்ன நினைத்தாளோ, பழைய நிகழ்ச்சிகள் தோன்றி மறைந்தனவோ, தேவர்களுக்கெல்லாம் தலைவன் — இந்திரலோகத்தரசன்—தேவேந்திரனுடன் "காமப் பெருமண்மதுவின் தேறலை ஒக்கவுண்டிருந்ததை" நினைத்துக்கொண்டாளோ என்னவோ, அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது, பின் மறைந்தது, மறுபடியும் சோகம் படர்ந்தது.

அகலிகையின் பக்கத்தில், சமதக்னியின் மனைவி ரேணுகை உட்கார்ந்திருந்தாள். அந்த ரிஷி பத்தினி, ஒருசமயம் நீராடச் சென்று அங்கு ஒரு காந்தருவனைக்கண்டு, மோகித்து, சமதக்னி கட்டளையால் மகன் பரசுராமனால் தலை துண்டிக்கப்பட்டு, பின் மகன்வேண்ட, சமதக்னியால் உயிர்தரப்பட்டவள். அந்தப் பதிவிரதை ரேணுகையும் யாககுண்டத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

ரேணுகைக்குப் பக்கத்தில் இருந்த மரிசி பலப்பல கதைகள் சொல்லிக்கொண்டிருந்தாள். மரிசி காசிபரின் மனைவி. காசிபரும் அவளும் நடத்திய காமக்களியாட்டங்கள் பல. மனித உருவில் பெரும் காமவின்பம் போதாதென்று, மானாக, மாடாக, யானையாக, பூனையாக, கழுகாக, காகமாக உருமாறி காமவின்பத்தைக் கரைகண்டவர்கள். அந்த மரிசி பல 'கதைகள்'—பழங்கதைகள் சொல்லிக்கொண்டிருந்தாள்.

மற்ற ரிஷி பத்தினிகளுடன் அதிகம் பேச்சு வைக்காமல் அருந்ததி மட்டும் யாகத்தீயை வளர்க்கும் காரியத்தில் ஈடுபட்டிருந்தாள்.

தீ வளர்ந்துகொண்டிருந்தது, கண்களில் வெறி தெறிக்க, அக்னிதேவன் ரிஷி பத்தினிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான்-அகலிகை, ரேணுகை, அனுசூயா, மரிசி, அருந்ததி முதலானோர்.

அக்னிதேவன் காமவெறி மீறி, யாகக்குண்டத்திலிருந்து வெளிக்கிளம்பி, அந்த ரிஷிபத்தினிகளைக் கைப்பற்றுவதெனத் தீர்மானித்தான். சப்தரிஷிகளின் பத்தினிகள், அவர்களைக் கைப்பற்றினால்—அந்த ரிஷிபத்தினி

களில் சிலர் இசைந்துவிடுவார்கள், ஆனால் விபரீதம் தெரிந்தால் சப்தரிஷிகளும் சேர்ந்து கடும் சாபம் தந்துவிடுவார்களென்பதும் அவனுக்குத் தெரியும். இருந்தாலும் இந்தப் பத்தினிகளை அடைந்தபின் எத்தகைய சாபம் வந்தாலும் பர்தகமில்லை என்று அவனுக்குத் தோன்றியது. யாகக்குண்டத்தை விட்டு வெளியேறி, தன் உண்மை உருவத்துடன் அவர்கள்முன் செல்வதெனத் தயாரானான்.

ஆனால் அதற்குள் இரவு முடிந்துவிட்டது, காலை வெளிச்சம் பரவத்தொடங்கியது. ரிஷி பத்தினிகள் எழுந்துசென்றுவிட்டனர். அவர்களுடைய இடத்தில் சப்தரிஷிகள்—அத்ரி, வசிட்டர், காசிபர், கௌதமர், விசுவாமித்திரர், சமதக்னி, பரத்துவாசர் முதலானவர்கள் உட்கார்ந்து, யாகத்தை வளர்த்து மந்திரங்கள் சொல்ல ஆரம்பித்தனர். அந்த ரிஷிபத்தினிகளைப் பார்த்துவிட்டு, இந்த அகோர மூர்த்திகளைப் பார்ப்பதென்றால், அக்னிக்கு வேதனையாக இருந்தது.

அக்னிதேவனுடைய சோகமான—வேதனையான தோற்றத்திலிருந்து, ஏதோ விபரீதம் தோன்றிவிட்டது என்பதை, அவனுடைய மனைவி சுவாகாதேவி கண்டுகொண்டாள். ஆராய்ந்து, சப்தரிஷி பத்தினிகளின்மீது தனது கணவன் ஆசைகொண்டுள்ளானென்பதைத் தெரிந்துகொண்டாள். சப்தரிஷிகளை நினைக்கும்பொழுது, தன் கணவனுக்கு ஆபத்து அதிகம் என்பதை உணர்ந்தாள். ரிஷிபத்தினிகளை நினைக்கும்பொழுது—அதில் அகலிகை, ரேணுகை முதலானவர்கள் இருக்கிறார்கள்—அவளுடைய பயம் அதிகமானது. அக்னிதேவன் மறுத்தால்கூட, அவர்கள் அவனிடம் மயங்கி, அவனை தங்களுடையவனாக ஆக்கிக்கொள்வார்கள். அந்த அளவு பயிற்சியும் பண்பும் அவர்களுக்கு முன்னதாக இருக்கின்றன. மிக ஆபத்தான கட்டத்தில் தன் கணவன் இருப்பதை அவள் உணர்ந்தாள். அந்த ஆசையிலிருந்து—முயற்சியிலிருந்து அக்னிதேவனைத் திருத்திவிடுவதென்பதும் முடியாத காரியம். அவன் தேவனாயிற்றே! காமவிவகாரங்களில், முன்வைத்த காலை பின்வாங்காமல் போராடுவார்களே!

கணவனை எப்படிக் காப்பாற்றுவது என்பதில் விசாரம்கொண்ட சுவாகாதேவி கடைசியாக ஒரு வழியைக் கண்டுபிடித்தாள். சப்தரிஷி பத்தினிகளில் முதலாவதாக அகலிகையைப்போல வேடமெடுத்து, சப்தரிஷிகள் யாகஞ்செய்யும் காட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

இரவு யாகத்துக்கு அந்தவழி வந்த அக்னிதேவன், அகலிகை அங்கு நிற்பதைக்கண்டு, ஆனந்தமும், சற்று அச்சமும் அடைந்தவனாய் அருகில் சென்று முதலில் பணிவுடன் உரையாடினான், பின் பணிவுடன் சற்றுக் கனிவும் சேர்ந்தது. கனிவு, நேசமாக, பாசமாக, ஆதரவாக, அன்பாக, கடைசியில் காதலாக, காமமாக மாறியது. எதிரே இருந்த ரிஷிபத்தினியோ அவன் கூறுவதைக் கேட்டு, மகிழ்ச்சியுடன் புன்முறுவல் பூத்து நின்றாள். அக்னிதேவனுக்கு எதிர்பார்த்ததைவிட மிகச் சுலபமாக இருந்தது, 'அகலிகையை'க் கைப் பற்றுவது.

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு ரிஷிபத்தினியாக சுவாகாதேவி உருமாறிவந்தாள். ரிஷி பத்தினிகளைக் கைப்பற்றிவிட்டோமென்ற இறுமாப்பில் அக்னிதேவனும் இருந்தான்.

சுவாகாதேவி ஒவ்வொரு ரிஷிபத்தினியாக வந்தாள். ஆனால் அருந்ததியாக மட்டும் அவள் வரவில்லையாம். அதற்குள், சப்தரிஷிகளில் ஒருசிலர் காட்டில் நடக்கும் காதல் விளையாட்டுகளை உணர்ந்துகொண்டனர். பெண் யாரென்று அவர்களுக்கு முதலில் தெரியாது. ஆனால் ஆண் அக்னி என்பதுமட்டும் அவர்கள் தெரிந்துகொண்டனர். தாங்கள் நடத்தும் யாகத்துக்கு வந்திருந்து தங்களுக்குரிய மதிப்பைத் தராமல், அதே காட்டில் வேறோர் இடத்தில் அக்னி வேடிக்கை விளையாட்டிலிருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டதும் சப்தரிஷிகளுக்குக் கோபம்வந்தது.

ஒருநாள் பகல் யாகம் முடிந்ததும், சப்தரிஷிகள் ஒன்றுகூடிக் காட்டுக்குள் அக்னியிருக்கும் இடத்தைத் தேடிவந்தார்கள். இருவர்—காதலன், காதலி—பேசிடும் சத்தம் கேட்டு ஒளிந்து நின்று வேடிக்கை பார்த்தனர். அக்னிதேவன் ஒரு பெண்ணுடன் வேடிக்கை பேசிக்கொண்டிருந்தான்.

ஒரு பெண்—அந்தப் பெண்' வேறுயாருமில்லை—அகல்யாதான்!

ரிஷிகள் கோபித்தனர். கௌதமரின் கண்கள் சிவந்தன, தாடியை உருவிக்கொண்டார். "ஆகா! மறுபடியும் இவள் மோசஞ்செய்துவிட்டாளே! முன்பு இந்திரனிடம் மயங்கினாள்! இப்பொழுது அக்னியின் மார்புமீது சாய்ந்து மழலை பேசுகிறாள், கொஞ்சிக் குலாவுகிறாள்" என்று இருவருக்கும் சாபம்தரத் தயாரானார்.

மற்ற ரிஷிகள் கௌதமரை சற்று ஏளனத்துடன் பார்த்தார்கள். கௌதமரின் கோப

திகமானது. மற்ற ரிஷிபத்தினிகள் ஒழுங் க இருக்கிருர்களென்பது என்ன நிச்சயம்?

அகலிகை அங்கு இருப்பதைப் பார்த்ததும், ற்ற முனிவர்களுக்கும் தங்களுடைய பத்தினி ளைப்பற்றிச் சந்தேகம் வந்தது. அக்னியை ளர்க்க இரவு நேரத்தில் பத்தினிகளைத் தனி கவிட்டு வந்ததால், இந்த விபரீதங்கள் ழ்ந்திருக்கக்கூடும் என்று அவர்கள் கருதி ர்கள். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் ன்றவாறு, அந்த சப்தரிஷிகள் நடத்திய மக்களியாட்டங்கள் பலப்பலவாதலால், வர்களுடைய சந்தேகம் பலமாக இழிந்தது. ன்று அகலிகை, மற்றும் இன்னும் யாரார் ன்ற ஐயப்பாடு அவர்களுக்கு உண்டானது. ன்று அக்னிக்குச் சாபம் தராமல் திரும்பி ட்டனர். மறுநாள் பூராவும், கௌதமர் கலிகைமீது கோபப்பார்வையைச் செலுத் யபடியே இருந்தார்.

மறுநாள் இரவு சப்தரிஷிகள் ஒன்றுகூடி, க்னிதேவனைத் தேடிவந்தார்கள். இன்று க்னி அனுசூயாவுடன் கொஞ்சிக்கொண் ருந்தான்.

ஒவ்வொருநாளும், ஒவ்வொரு ரிஷி பத்தினி அருந்ததியைத் தவிர்த்து. சப்தரிஷிகளின் பம் உச்சநிலையடைந்தது.

ஹோமத்தீ வளர்க்க அக்னியை சப்தரிஷி அழைத்தால், அவன் ரிஷிபத்தினி டன் காமத்தீ வளர்க்க ஆரம்பித்துவிட் னே என்று சப்தரிஷிகள் சீறியெழுந்தனர். ங்கள் அதுவரை செய்த தவத்தையெல் ம் முன்வைத்து, அக்னிதேவனுக்குக் மையான சாபம்தர முற்பட்டார்கள்.

ப்தரிஷிகள் அக்னிதேவனுக்குச் சாபந்தர பட்டுவிட்டார்கள் என்பதை சுவாகாதேவி ந்துகொண்டாள். மற்றவர்களுக்கு, அக்னி வன், சப்தரிஷிகள் இவர்களுக்கு இல்லாத ண திருட்டி அவளுக்குமட்டும் வந்துவிட் போலும், சாபமிடத் தயாரான சப்தரிஷி முன் சுவாகாதேவி வந்துவிழுந்து, தன் வனைத் தண்டிக்காதிருக்குமாறு வேண்டி , நடந்த கதையைச் சொன்னாள்; அருந் யைத்தவிர மற்றவர்களைப்போலத் தான் வெடுத்து வந்ததைச் சொன்னாள். அவள் ல்வதை ஏழு முனிவர்களால் நம்பமுடிய லை. ஒருவேளை தன் கணவனைச் சாபத்தி ந்து தப்புவதற்காகச் சுவாகா தந்திரம் கிருளோ என்ற சந்தேகம் அவர்களுக்கு ந்து. எப்படியிருந்தாலும், சுவாகாதேவி ல்வதை நம்புவதுதான் நல்லது என்று அவர்களுக்குப் பட்டது. அக்னியை மன்னித்து அவர்கள் அனுப்பிவிட்டார்கள்.

சுவாகாதேவியால் அருந்ததி உருவத்தை எடுக்கமுடியாததற்குக் காரணம், அருந்ததி சிறந்த கற்புடையவள் என்பதால் என்று புராணகாரர் காரணம்கூறுகிருர். காரணம் நன்ருகத்தான் இருக்கிறது. அருந்ததியின் கற்பு, அவளைப்போல மாறுவேடம்போடக் கூட மற்றவர்களை அனுமதிக்கவில்லை. இந்தக் காரணம் அருந்ததியின் கற்புத்தன்மையை விளக்குவதாக இருக்கிறதேயொழிய, மற்ற ரிஷிபத்தினிகளைத் தாழ்த்துவதாக இருப்பதைப் புராணக்காரர் உணரவில்லை. அருந்ததியைப்போல வேடமிட்டுவர சுவாகாதேவியால் முடியவில்லை. காரணம் அருந்ததி கற்புக்கரசி என்ருல், மற்ற ரிஷிபத்தினிகளைப்போல சுவாகாவால் வேடமிடமுடிந்ததற்குக் காரணம் அவர்கள் கற்புக்குலைந்தவர்கள் என்றுதானே அமையும்!

எவ்வாறிருப்பினும், முனிவர்கள் செய்யும் யாகத்திற்குச் சென்ற அக்னி—அதிலும் முனிவர்களுக்கெல்லாம் தலைவர்களாக விளங்குகிற சப்த முனிவர்கள் செய்த யாகத்துக்குச் சென்ற அக்னி, முனிபத்தினிகள்மீது மையல் கொண்டு, மாபாதகம் செய்யத்துணிந்தான் என்பது இக்கதையால் தெரிகிறது.

ஒருசமயம் சிவபிரானும், பார்வதிதேவியும் நீண்டகாலம் தனிமையில் இருந்தனராம். தேவர்கள் குறைதீர சிவனிடம் முறையிடலாம் என்று போனுல், சிவபிரான் கிடைப்பதில்லை. பூதகணங்களைக் கேட்டால், "எம்பிரான், எம்பிராட்டியுடன் தனிமையில் இருக்கிருர்!" என்று கூறிவிடுவார்கள். இரவு பகல், வெப்பம், குளிர், எந்தக்காலமும் ஒரேவிதமாக இருந்தது. சிவபிரானுக்கு. உமாதேவியாருடன் கூடிக் குலவுவதிலேயே அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார். அம்மையார் தந்த போகத்தில் ஆண்டவன் ஆழ்ந்துவிட்டதால், அடியார்கள் அனுப்பும் விண்ணப்பங்களை பார்க்கமுடியவில்லை, நேரில் வருபவர்களுக்குத் தரிசனம் தந்து, அவர்களுக்குற்ற குறைகளைத் தீர்க்கமுடியவில்லை. தேவர்களோ, அசுரர்களால் தாக்கப்பட்டு, வலிவிழந்து, சிவபெருமான்தான் காப்பாற்ற வேண்டும் என ஓடிவந்து "சிவபெருமானே! மும்மூர்த்திகளில் முதல்வனே! உம்மை நாங்கள் வேண்டுகிறேம்! கடைக்கண்ணருளால் கருணைபுரிவீராக!" என்று முறையிட்டார்கள். ஆனுல் சிவபிரானே மற்ருேர்புரத்தில் "என் சிந்தை கவர்ந்தவளே! சிற்றிடையாளே!

கடைக்கண் அருளாயோ, கருணை புரியாயோ!'' என்று உமாதேவியின் கையைப் பிடித்திழுத்து, 'சிவலீலைகள்' புரிந்துகொண்டிருந்தார். பல ஆண்டுகளாயும், சிவனாரின் மோகம் தெளிந்தபாடில்லை.

தேவர்கள் ஒன்றுகூடி யோசித்தனர். சிவனாரின் மோகத்தைத் தடைசெய்யவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தனர். கடைசியாக ஒன்றுகூடிச் சென்று, அக்னிதேவனை அழைத்து, " அசுரர்கள் நமக்கு இழைக்கும் கொடுமைகளைச் சிவபெருமானிடம் போய்ச் சொல்லி வருவாயாக!'' என்று அனுப்பினார்கள். அக்னிக்குக் கைலையில் நடைபெறும் காமக்கூத்துத் தெரியாது. எப்போதும் போனால் சிவபிரானைக் கண்டு, குறையைச் சொல்லிவிட்டு வருவதுபோல் இப்பொழுதும் வந்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டு அவன் புறப்பட்டான். அதிலும் தேவர்களின் தூதனாகத் தான் செல்வது பெருமைக்குரிய செயல் என்று அவன் பெருமைப்பட்டுக்கொண்டான். மிக ஆடம்பரத்துடன், அணிமணிகளுடன், தேவர்கள் தந்த முறையீடுகளைகளையும் எடுத்துக்கொண்டு அக்னிதேவன் கைலைநோக்கிச் சென்றான். தான் செல்லும் தூது மிகச் சுலபமானது என்பது அவனுடைய எண்ணம். சிவபிரான் தேவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பவர். அசுரர்கள் கை ஓங்கியிருக்கிறதென்றால், யார் பக்கம் நியாயம் இருந்தாலும், அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றிவிடுவார். சிவபிரான் அந்த அழிக்கும் தொழிலில் மிக வல்லவர். மழுவோ. சூலமோ எடுத்துக் களத்தில் புகுந்து, சண்டையிடவேண்டிய அவசியம்கூட அவருக்குக் கிடையாது. எதிரிகளைப் பார்த்துச் சிரித்தாலே போதும்! எதிரிகள், அவர்களுடைய பட்டினங்கள், எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடும்!

போய்க் குறைகளைச் சொல்லவேண்டியது தான் தாமதம், முக்கண்ணன் உடனே அதை முடித்துவிடுவார் என்று நினைத்துக்கொண்டு தான் அக்னி கைலை சென்றான்.

கைலாயகிரியை அடைந்ததும், அக்னிக்குத் தான் கொண்டுவந்த தூதின் கடினம் தெரிந்தது. எங்குபார்த்தாலும் காவல் அதிகமாக இருந்தது. எந்த வாயலில் திரும்பினாலும் " எம்பிரானைப் பார்க்கமுடியாது" என்று வெளியே திருப்பியனுப்பினார்கள். பூதகணங்களை அணுகினால், " அந்தப்புரத்தில் ஆண்டவன் பிராட்டியாருடன் பேசிக்கொண்டிருக்கிறார்!'' என்று கூறினார்கள்,

" பூ! இவ்வளவுதானா! உமாதேவியாருடன் சிவபிரான் ஏதாவது லோகவிவகாரங்களை பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்! இந்தச் சமயத்தில் நாம் போய் தேவர்களின் குறையைச் சொன்னால், நிச்சயமாக அருள் கிடைக்கும். சிவனார் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், லோகமாதாவாம் உமாதேவியார் தேவர்களுக்காகப் பரிந்துபேசி, அபயமளிப்பார்கள்!'' என்று கருதினான். ஆனால் அந்தப்புரக் காவலாளர்கள்—பூதங்கள், அக்னிதேவனை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். எவ்வளவு முயன்றும், எவ்வளவு சொல்லியும் அக்னியால் அந்தப்புர வாயிலை அடைய முடியவில்லை.

தேவர்களின் தூதனாக வந்துத் திரும்பிப் போவது சரியாக அக்னிக்குப் படவில்லை. அந்தப்புரத்தில் எப்படி நுழைவது என்று யோசித்துக் கடைசியாகப் புறாவைப்போல் உருவெடுத்து, மதிற்சுவரைத் தாண்டி அக்னிதேவன் உமாதேவியாரின் அந்தப்புரத்தில் புகுந்தான்.

(தொடரும்)

நோயும் மருந்தும்

டாக்டர் தம்புசாமி, நோய்களின் தன்மையை அறிந்து அதற்குத் தக்க மருந்துகளைக் கொடுத்துக் குணப்படுத்தும் கெட்டிக்காரர் என்று ஊரில் பெயர்பெற்றிருந்தார்.

ஒருசமயம் அவர் ஒரு அழைப்பின்பேரில் ஒரு நோயாளியின் வீட்டிற்குச் சென்றிருந்தார். நோயாளியைப் பரிசோதனை செய்துகொண்டிருக்கும்பொழுது, நோயாளியின் மனைவி டாக்டரிடம் தனது கணவனது நோய்பற்றியும், அவரது பழக்க வழக்கங்கள் பற்றியும், நோய்க்கு வேண்டிய மருந்து பற்றியும் "தொண தொண''வென்று கூறிக்கொண்டிருந்தாள்.

பரிசோதனை முடிந்ததும் டாக்டர் நோயாளியின் மனைவியைப் பார்த்து, " இவருக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. முழு ஓய்வும், நல்ல அமைதியும் இருக்கவேண்டும். நான் சில தூக்க மாத்திரைகள் தருகிறேன்'' என்று கூறிப் பெட்டியிலிருந்து சில மாத்திரைகளை எடுத்துவைத்தார்.

" இதை எப்பொழுது டாக்டர் அவருக்குக் கொடுக்கவேண்டும்'' என்றாள் நோயாளியின் மனைவி.

" மாத்திரைகள் உனக்கு. அவருக்கல்ல'' என்று கூறிவிட்டு வெளியேறினார் டாக்டர் தம்புசாமி.

அமைதி வழியில் அணுவாற்றல்

அணுவாற்றலைப் பற்றிய பேச்சு இன்று அவனி எங்கும் பேசப்படுகின்றது. சிலரால் அச்சத்துடன் பேசப்படுகிறது; சிலரால் ஆவலுடன் பேசப்படுகிறது. உலகப் பொதுமக்கள் அச்சம்—ஆவல் ஆகிய இரண்டு உணர்ச்சிகளுக்கிடையே மாறிமாறித் தள்ளப்பட்டு ஊசலாடும் நிலையிலிருக்கிறார்கள்.

அணுவாற்றல், அணுக்குண்டின் மூலம் தன்னை முதன்முதல் அறிமுகப்படுத்திக் கொண்டு வந்ததால், அணுக்குண்டின் ஆற்றலையும், அதனால் ஏற்பட்ட அழிவையும் கண்ட மக்கள், அதனை எப்பொழுதும் அச்சத்தோடு பார்க்கும் பழக்கத்தை அடைந்துள்ளனர். அந்த அச்சத்தை நீக்கும் பணியில் உலக அறிவியற் பேரறிஞர்கள் சிலரும், உலகைத் திருத்தும் உயர்ந்தோர் சிலரும் இதுநாட்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெருப்பு, நீர், காற்று, கத்தி போன்றவை [illegible] நன்மைக்கும் பயன்படும், தீமைக்கும் பயன்படும். அதுபோலவே அணுவாற்றலும் நன்மைக்கும் பயன்படும், தீமைக்கும் பயன்படும் பொருளாகும். நெருப்பை உணவு சமைப்பதற்கும் பயன்படுத்தலாம், பிறர் வீட்டைக் கொளுத்தவும் பயன்படுத்தலாம். கத்தியை மாம்பழம் அறுக்கவும் பயன்படுத்தலாம், ஒருவரைக் கொல்லவும் பயன்படுத்தலாம். அதுபோலவே அணுவாற்றலை அணுக்குண்டு செய்யவும் பயன்படுத்தலாம், அவனியைச் சுற்றும் கப்பலை ஓட்டவும் பயன்படுத்தலாம். எனவே குற்றம் அணுவாற்றலிடத்து அல்ல; அதனைத் தீமைக்குப் பயனபடுத்துவோரிடத்துதான் அமைந்துகிடக்கிறது.

அறிவியல் அறிஞர்களை எடுத்துக்கொண்டால், அவர்களில் பெரும்பாலோர், அணுவாற்றலை நல்வழியில் பயன்படுத்தவேண்டும் என்றுதான் எண்ணுகின்றனர். ஆனால் ஆட்சியாளர்களில் தீய நோக்கம் படைத்தோர் [illegible] அதனை அணுக்குண்டு செய்தல் போன்ற தீய வழியில் பயன்படுத்தவேண்டும் என்று எண்ணுகின்றனர். அணுக்குண்டு, நீர்வளிக்குண்டு போன்ற அழிவுக்கருவிகளை அறிவியல் அறிஞர்கள்தானே கண்டுபிடிக்கிறார்கள் என்றால், அவர்கள் ஆட்சியாளரின் கட்டளைக்கும் வற்புறுத்தலுக்கும் அஞ்சி, அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டியவர்களாகிறார்களே ஒழிய, அவர்களாக விரும்பி அவற்றைக் கண்டுபிடிக்கவில்லை. அணுவாற்றலை மக்களுக்கு நலம்பயக்கும் துறைகளில் பயன்படுத்தவேண்டும் என்றுதான் எல்லா அறிவியல் அறிஞர்களும் மனமாரக் கருதுவார்கள். தீயநோக்கம் படைத்த ஆட்சியாளர்களின் மனப்போக்கு நல்ல முறையில் மாற்றப்பட்டால், பிறகு அணுவாற்றலைப்பற்றிப் பொது மக்களிடத்தே அச்சந்தோன்றாது; ஆவல் பெருக்கம் ஏற்படும். எனவே உலகோரால் வெறுத்தொதுக்கப்படவேண்டியவர்கள் தீய அரசியல்வாதிகளேயல்லாமல், அணுவாற்றல் அல்ல!

காலங்களைக் கற்கருவிக்காலம், செப்புக்கருவிக்காலம், இரும்புக்கருவிக்காலம், நீராவிக்காலம், மின்னாற்றல்காலம் என்று மனிதனுக்குப் பயன்படும் பொருள்களைக் கொண்டு காலங்களைப் பகுத்துக் கூறுவர் அறிவுடையோர். கடைசிக்காலமாகிய மின்னாற்றல் காலம் மறையத்தொடங்கி, இப்பொழுது **அணுவாற்றல் காலம்** தோன்றத்தொடங்கிவிட்டது என்னலாம்.

அணுவாற்றலை அடக்கி ஆளாவிட்டால், அடங்காத் தீயைப்போல், அது உலகுக்குப் பெருங்கேடாய் முடியும் என்பதும், அதனைக் கட்டுப்படுத்திவிட்டாலோ, மனிதன் தேடும் உலகியல் நலன்களெல்லாம் ஒருங்கே கிடைக்கவும்கூடும் என்பதும் போற்றத்தக்க வகையில் இன்றைய உலகோரால் உணரப்பட்டு வருகின்றன.

தீ, நீராவி, நெய்யாவி (பெட்ரோல்), நிலக்கரி, மின்னாற்றல் முதலியவற்றைக் கண்டுபிடித்தபோதெல்லாம் உலகப் பொருளாதாரம் எவ்வளவோ மாறுதல் அடைந்திருக்கிறது. இவையெல்லாம் பொறியாற்றல் அளிப்பதில் பெரும் புரட்சி செய்தவை. ஆனால் அணுவாற்றல் இவற்றையெல்லாம் மிஞ்சிவிடும் என்பது திண்ணம். அணுவாற்றற் புரட்சி மிக்க மாறு

தல் செய்யக்கூடியதாகும். அது வெறும் பொறியாற்றற் புரட்சி மட்டும் அல்ல. அணுவாற்றல் புரட்சியால் ஆலைத்தொழிலும், போக்குவரத்தும், செய்திப்போககுவரத்தும், உழவுத்தொழிலும், மருத்துவமும், சமூகப் பழக்க வழக்கங்களும், உயிர்நூலும், அரசியலும், பொருளாதாரமும் ஆகிய எல்லாமுமே மிகப்பெரிய நல்ல மாறுதல்களுக்கு உள்ளாகும். இன்றுள்ள நிலைமையை மாற்றும் புரட்சியே, அணுவாற்றலாய் உருவெடுத்து வந்திருக்கிறது!

அணுவாற்றல் தொழில், இப்பொழுதே உலகின் பலபகுதிகளில் பயன்பட்டு வருகிறது. இன்று அமெரிக்காவிலும், கனடாவிலும் சுமார் 1000-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் தம் அன்றாட வேலைகளுக்கு அணுவாற்றலைப் பயன்படுத்திவருகின்றன. தாங்கள் செய்யும் பொருள்களின் கனிப்பகுதிகளைச் (உலோகப் பகுதிகளை) சரிபார்க்கவும், காகிதத்துக்கு ஏற்றப்படும் வழவழப்பும், இரும்புக்கும் பூசப்படும் துத்தநாகப் பூச்சும் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்கவும் அணுவாற்றற் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

உற்பத்தி செய்யும் பொருள்களைக் குறைந்த செலவில் திறமையாகச் சரிபார்க்க அணுவாற்றல் உதவுகிறது; இதனால் உற்பத்தி விரைவு கூடும்; உற்பத்திச் செலவு குறையும்.

கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் பொருளைக் காட்டும் அணுவாற்றல் பொருளும் தொழிலுலகில் மேல்மேலும் பயன்பட்டு வருகிறது. அணுக்கதிரியக்கமுள்ள ஒரு அணுவாற்றல் பொருளின் மூலம் ஒரே குழாயில் விடப்படும் இருவகை எண்ணெய்களைத் தனித்தனியே பிரித்து அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

பிசிட்டன் தேய்வை ஆராய்ந்து அறிதல் ரப்பர்—தாள்—கனித்தகடுகள் ஆகிய இவற்றின் கனத்தை அளத்தல், வார்ப்புப் பிழைகளைப் படம்பிடித்தறிதல், சாயம்—வண்ணம்—படிகம்—இரசாயன உப்பு முதலியவற்றின் கலப்படத்தை அறிதல் ஆகிய வேலைகளுக்குக் கதிரியக்கமுள்ள அணுவாற்றற் பொருள்களால் விரைவானவையும், மலிவானவையும், மிக்க திறமையானவையும் ஆன வழி துறைகள் தோன்றியுள்ளன.

பயிர் வளர்ச்சி, மண்வளம் இவற்றைப் பற்றிய முக்கிய உண்மைகளைப் புலப்படுத்தும் ஆராய்ச்சியும் அணுவாற்றலின் உதவியால் நடந்துகொண்டிருக்கிறது.

அணுக்கதிரியக்கமுள்ள அணுவாற்றற் பொருள்களைக் கொண்டு நோய்களை எளிதாகவும், விரைவாகவும், நன்றாகவும் போக்கும் முறைகளை மருத்துவத்துறையில் கண்டுபிடித்துவருகின்றனர்.

அணுவிலிருந்து பொறியாற்றலை உற்பத்தி செய்து, அதனைக்கொண்டு பொறிகளை இயக்குவதற்கான வழிவகைகளைக் காணும் முயற்சியில் பலநாடுகள் முனைந்திருக்கின்றன. பிரிட்டனில் நிலக்கரிச் சுரங்கங்களின் வளம் குன்றுகிறபடியால், நிலக்கரி விலை ஏறிக்கொண்டே போகிறது. பிரிட்டிசுக்காரர்கள் அணுவாற்றலைப் பொறியாற்றலாக மாற்றுவதிலே மிக்க முயற்சி எடுத்துவருகின்றனர். நிலக்கரியால் கிடைக்கும் மின்னாற்றலை, அணுவாற்றலின் மூலம் கிடைக்கும்படிச் செய்துவிட்டால், செலவும் குறையும், நிலக்கரிப் பற்றாக்குறையால் தவிப்பும் ஏற்படாது என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பாவில் பொறியாற்றல் தட்டுப்பாடு ஏற்படும் என்று நன்றாகத் தெரிகிறது. ஆகவே, அணுவாற்றல் ஐரோப்பாவுக்கு ஒரு பெரும் கருவூலமாகும். கடந்த 2000 ஆண்டுகளில் உலகில் எவ்வளவு ஆற்றல் பயன்பட்டதோ, அதைப்போல் 37 மடங்கு ஆற்றல் அடுத்த 100 ஆண்டுகளில் செலவாகும் என்று ஒருவர் மதிப்பிட்டிருக்கிறார். 12 ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து அணுவை அமைதிவேலைகளில் செலுத்தும் வழிதுறைகளை ஆராய வேண்டி சுவிட்சர்லாந்தில் செனிவாவுக்கு அருகே அணு உடைப்பான் பொறியொன்றை அமைத்துவருகின்றன. இதைப்போல் பெரிய அணு உடைப்பான் உலகத்தில் வேறில்லை.

அணுவிலிருந்து மின்னாற்றல் எடுத்து விலைக்கு வழங்கும் திட்டம் அமெரிக்காவிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறது. அங்கே அணுவாற்றல் கமிசன் அத்தகைய தொழிற்சாலையை முதன்முதலாக அமைத்துவருகிறது.

அணு மின்னாற்றல், மற்றவகையில் மிகமிகத் திறமையாக உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலைக்காட்டிலும் விலை மலிவாகக் கிடைக்கும்படி விரைவில் உற்பத்தியாகத்தொடங்கும் என்று சொல்ல இன்று நிபுணர்கள் தயங்குகிறார்கள். ஆனாலும் இன்று அமெரிக்காவில் மின்னாற்றலுக்கு என்ன செலவாகிறதோ அதைவிட மிகவும் குறைந்த செலவிலேயே அணுவிலிருந்து மின்னாற்றல் உற்பத்தி செய்யலாம் என்பதை அறியாதார் ஒருவருமில்லை.

அணுவாற்றல் பொருள்களிலிருந்து கிடைக்கக்கூடிய சக்தி நிலக்கரி, எண்ணெ, வாயு ஆகியவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய சக்தியை விட 20 மடங்கு அதிகம். நம்முடைய மக்கள் தொகைப் பெருக்கத்தைக்காட்டிலும் மிகவேகமாகப் பெருகுகிறது ஆற்றல் செலவாகும் விகிதம். இன்றுள்ள இயற்கையான எரி பொருள்களால் இனி ஏற்படும் தேவைகள் எல்லாவற்றையும் ஈடுசெய்யமுடியாது என்று உணரவேண்டியதாகிறது.

அணுவாற்றலின் மின்னாற்றலுக்கு இன்னும் ஒரு வசதியுண்டு. அணுவாற்றல் பொருள்களில் ஆற்றல் மிகச் செறிந்திருக்கிறது. ஒரு ராத்தல் நிலக்கரியிலிருந்து ஒரு ஒரு யூனிட் மின்னாற்றல் எடுக்கலாம். ஒரு ராத்தல் தசை எடுக்கும் ஆற்றலைக்காட்டிலும் இது சுமார் 100 மடங்கு பெரிது. ஆனால் ஒரு ராத்தல் யுரேனியத்திலிருந்து 235-லிருந்து 25,00,000 ராத்தல் நிலக்கரிக்குச் சமமான ஆற்றல் எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இதில் நூற்றுக்கு ஒருபங்கு கிடைத்தாலும் நிலக்கரி ஆற்றலைவிட அணுவாற்றல் 25,000 மடங்கு அதிகமாகும்.

'நாட்டிலசு' 'கடல் ஓநாய்' என இரு நீர்மூழ்கிக் கப்பல்கள் இன்று அணுவாற்றலால் மணிக்கு 20 கடல்மைல் வேகத்துக்கும் அதிகமாக இயங்குகின்றது. சில ராத்தல் யுரேனியத்தில் அவை கடலுக்கு அடியிலேயே ஆயிரக்கணக்கான மைல்கள் செல்லும்.

இனி அணுவாற்றலால் இயங்கும் கப்பல்களும், விமானங்களும், ரயில்வண்டிகளும் வரும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரச்னையுண்டு என்றாலும், அவை வரும் நாள் அதிக தூரத்தில் இல்லை. அணுசக்தியால் பொறிகள் இயங்கும். நம்முடைய நகரங்களில் மின் விளக்குகள் எரியும். அணுவாற்றலால் உணவு சமைப்போம், நோய்கள் குணமாகும். அத்தகைய காலம் விரைவில் வருகிறது என்று தயங்காமல் உரைக்கலாம்.

சிக்கன முறையில் கடல்நீரைச் சுத்தமாக்கி உழவுக்கும் தொழிலுக்கும் உகந்தவாறு செய்யவேண்டும். மனிதர் மலம், நீர் முதலியவற்றையும் தொழிற்சாலைக் கழிவுகளையும் உடனுக்குடன் பொசுக்கவேண்டும். இவையிரண்டும் நாகரிகத்தின் இரு பெரும் பிரச்னைகள். இவற்றை அணுசக்தி தீர்த்துவிடும். அது ஒன்றே தீர்க்கவல்லதுமாகும்.

உலகத்தின் இயற்கை வளத்தைத் திறந்து அள்ளுவதற்கு அணுவாற்றல் திறவுகோலாகும். அது மட்டுமல்ல. உலகின் பிணிகளையும், தீமைகளையும் ஒளித்துவைத்திருக்கும் பெட்டி போலத் தோன்றினாலும் அதனைத் திறந்துவிட்டால், அவையெல்லாம் மறைந்துபோய் விடும். அணுவாற்றல் பற்றிய தொழில் நுட்பம் ஏற்கெனவே விரைவில் வளர்ந்துவருகிறது. இந்தப் புதிய காலத்தின் பொருளாதாரத்தைப்பற்றி இலேசாக அறியத்தொடங்கியுள்ளோம். உலகத்தையே அழிக்கக்கூடிய இந்த அணுவாற்றலை அடக்கியாளும் குறைவற்ற பொறுப்புணர்ச்சி அமைந்த அமைதிதான் வேண்டும்.

●●

ரப்பரும் எஃகும்

ஒரு பொருள் துள்ளியெழுவதற்குக் காரணம் அதன் நீண்டு சுருங்கும் தன்மையேயாகும். அதை அழுத்தினாலும் நீட்டினாலும் மூல உருவத்தையும் அளவையும் விட்டு மாறாது. ரப்பர் பந்து கடற்பஞ்சுபோன்றிருக்கும். அதை அழுத்தினால் குறைந்துகொடுக்கும், ஆனால் கைவிட்டபிறகு மீண்டும் முன்பிருந்த நிலையை அடைகிறது.

நீண்டு சுருங்கும் தன்மையுடைய பொருள்களில் எஃகுதான் முதன்மையானதாகும். அதிக ஆற்றல் தேவைப்படுமேயொழிய, எஃகை நீட்டவும் அழுத்தவும் செய்யலாம். ஆனால் மீண்டும் பழைய நிலையை ரப்பரைவிட நன்றாக அடையும். இதன் காரணமாகவே பெரிய பெரிய பாலங்களுக்கு ஆதாரப்பொருளாக எஃகை உபயோகிக்கின்றனர். தரையில் அடிக்க அதிக உயரம் எழக்கூடிய பொருள் ரப்பர்தான் என்று நாம் எண்ணுவோம். ஆனால் ஒரு ரப்பர் பந்து எழும்பும் உயரத்தைவிட ஒரு எஃகுப் பந்து எழும்பும் உயரம் அதிகமாகும்.

பிறநாடுகளில் இந்தியர்கள்

இந்தியாவிலிருந்து உலகின் பல பகுதிகளுக்குச் சென்று, குடியேறி வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை சென்ற 10-ஆண்டுக் காலத்திற்குள்ளாக ஏதோவொரு ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்காகும்.

ஆசுத்திரேலியா	2,500
கனடா	3,000
நியூசிலாந்து	1.200
தென் ஆப்பிரிக்கா	3,65,524
தென் ரொடீசியா	4,150
சிலோன்	9,84,327
மலேயா	6,40,709
சிங்கப்பூர்	83,624
ஆங்காங்கு	1,500
மௌரிட்டசு	3,22.972
சிசிலீசு	285
சிப்ரால்டர்	41
நைசீரியா	375
கென்யா	90,528
உகந்தா	33,767
நியாசாலாந்து	4,000
சான்சிபார்	15,812
தங்கனியாகா	56,499
சமைக்கா	26,500
திரினிதாத்—டொபாகோ	2,273,90
பிரிட்டீசு கயானா	1,97,696
பீசித்தீவுகள்	1,48,802
பிரி. வடபோர்னியோ	1,298
வட ரொடீசியா	2,600
ஏடன்	9,456
சாரவாக்	2,300
புருனெய்	436
பிரி. சோமாலிலாந்து	250
மால்டா	37
கிரனடா	9,000
செயின்ட் லூசியா	7.000
பிரி. கோண்டுராசு	2,000
சைராலியோன்	76
பிரிட்டன்	7128
லீவார்டுத் தீவுகள்	99
கோல்டுகோசுட்டு	250

செயின்ட் வின்சென்ட்
பார்படோசு
செயின்ட் கிட்சு
டொமினிசியா
பர்மா
இந்தோனேசியா
தாய்லாந்து
இந்தோ-சீனா
சப்பான்
பக்ரெயின்
ஈராக்
மசுகட்டு
போர்த்துகீசு கிழக்கு ஆப்பிரிக்கா
மடகாசுக்கர்
ரீயூனியன்
அமெரிக்கா
பிரேசில்
பனாமா
ஆப்கனிசுத்தான்
ஈரான்
எதியோபியா
டச்சு கினியா
பிலிப்பைன்சு
லெபனான்
சிரியா
கூவெயிட்டு
சாவூதி அரேபியா
பாலத்தீன்
செர்மனி
ஆத்திரியா
இத்தாலி
பெல்சியன் காங்கோ
பெல்சியம்
ருவாண்ட உரண்டி
இத்தாலியன் சோமாலிலாந்து
நேபாள்
செச்கோசுலோவேகியா
பல்கேரியா
உருசியா
சுவிட்சர்லாந்து
பிரான்சு
போர்ச்சுக்கல்

ஆக

காவல் பயந்த காதல்

[எழினி]

பெண் பருவமங்கை ஆகிறாள். பருவம் அவளைப் பொலிவுடையவளாக ஆக்கிக் காட்டுகிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பண்புகள் அவளை முழுக்க முழுக்கத் தழுவத்தொடங்குகின்றன.

தக்கப் பருவம் அடைந்த மங்கையை முறைப்படி தினைப்புனங்காத்தல் தொழிலில் ஈடுபடுத்தவேண்டும் என்று அவளது பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். தலைவி தினைப்புனத்திற்குச் செல்ல மறுக்கிறாள். பெற்றோரும் உற்றாரும் அவளைப் போகும்படி வற்புறுத்துகிறார்கள். தாய்தந்தையரைவிட்டுப் பிரிந்து செல்லவேண்டி நேரிடுகிறதே என்று எண்ணி வருந்துகிறாள். பிறகு ஒருவாறு தன்னைத் தானே தேற்றிக்கொண்டு தினைப்புனங் காக்கச்செல்ல இசைகிறாள். தலைவிக்கு உதவியாக இருக்கும்படி கூறிப் பெற்றோர்கள் தோழியையும் தலைவியுடன் அனுப்பிவைக்கிறாள். இருவரும் தினைப்புனஞ் செல்கிறார்கள்.

தினைப்புனத்தில் அடர்ந்து செறிந்த கதிர்களைத் தாங்கிய தினைப் பயிர்கள்விரிந்து பரந்து காணப்படுகின்றன. தினைப்புனத்தின் நடுவில் காவல்காப்போர் தங்கியிருந்து காப்பதற்காகப் பரண் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. பரண்களை நடுவே கொண்ட தினைப்புனங்கள், அடுத்தடுத்துப் பலப்பலவாகப் பரந்துகிடக்கின்றன. கதிர்களைக் கொத்தப் பச்சைக்கிளிகள் கூட்டங்கூட்டமாக வர, அவைகளைப் பரண்கள்தோறும் உள்ள பெண்கள் கவண்கற்களை வீசி விரட்டியடிக்கின்றனர். பன்றி முதலாய காட்டு விலங்குகள் தினைப்புனங்களுள் புகுந்து பயிர்களுக்கு அழிவு ஏற்படாவண்ணம் அவ்விலங்குகளைத் தடுக்கவும், அவைகளைக் கொன்றுபோடவும் இளம் மழவர்கள் தினைப்புனங்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றனர். தினைப்புனங்களை அடுத்து உயர்ந்த மலையடுக்கங்கள் இருக்கின்றன. அவற்றில் வேங்கை மரங்கள் செழித்து வளர்ந்திருக்கின்றன. வேங்கை மரத்தின் நிழலில் மயில்கள் கூடுகள் கட்டிக்கொண்டிருக்கின்றன. செக்கச் சிவந்த வேங்கைப்பூக்கள் அக்கூடுகளின்மேலெல்லாம் சிதறிக்கிடப்பது கொல்லனது உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறிக்கிடப்பதுபோல் காட்சியளிக்கின்றது. வேங்கைமரத்தில் சிறிய காய்கள் காய்த்துத்தொங்குகின்றன. இத்தகைய இயற்கைக் காட்சிகளோடு கூடிய தினைப்புனத்தை நோக்கிதான் தலைவியும் தோழியும் வந்து சேருகிறார்கள்.

தலைவி தினைப்புனத்தின் பரணிலே தங்கியிருந்து காவல்காத்துவருகிறாள். தோழி தலைவியுடன் இருப்பதும், அவளுக்குவேண்டிய உதவிகளைச் செய்வதும், வீட்டிற்குச் சென்று தலைவிக்குத் தேவையான தின்பண்டங்களையும், உணவு வகைகளையும் கொண்டு வருவதும் ஆன தொழில்களில் ஈடுபட்டிருக்கிறாள். தினைப்புன வாழ்க்கை தலைவிக்கு நாளுக்குநாள் மகிழ்ச்சியளிப்பதாக மாறிவருகிறது.

தினைப்புனங்களைச் , சுற்றிக் காவல்காத்து வரும் இளம் மழவர்கள் அவள் அருகில் வரும்போது அவள் அழகு கண்டு சற்று மயங்கி நின்று, அவள் அழகைக் கண்ணால் பருகி, மேற்கொண்டு பெயர்ந்துபோவது வழக்கம். மழவர் கூட்டத்திலே அழகில் மிகச் சிறந்த இளைஞன் ஒருவன் அவளது அழகுநலத்தைக் கண்ணால்மட்டும் பருகினால் போதாது, அவளது நலன்களையெல்லாம் ஐம்புலன்களாலும் பருகவேண்டும் என்று பேராவல் கொண்டு காதற்பசி கொள்கிறான். மலரைச்சுற்றி வட்டமிடும் வண்டைப்போல, அவன் அம்மங்கை நல்லாளின் தினைப்புனத்தைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டேயிருக்கிறான். அவளை எப்படியேனும் அடைந்துவிடவேண்டும் என்று ஆர்வம் கொள்கிறான் தானே தலைவிக்கு ஏற்ற தலைவனாக மாறவேண்டும் என்று தனக்குள்ளே உறுதிசெய்துகொள்கிறான்.

தோழி ஒருத்தித் தலைவியிடம் வருவதும், சிறிதுநேரம் அவளோடு தங்கியிருப்பதும்,

பிறகு போய்விடுவதுமான காட்சிகளைக் காண்கிறான். தான் தலைவியைக் காதலிப்பது எவ்வகையிலும் தோழிக்குத் தெரிந்துவிடக்கூடாது, தெரிந்தால் தனது முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுவாள் என்று கருதித் தோழியின் கண்ணில்படாமல் தலைவியைக் காதலிக்கும் வழிவகைகளைக் காணும் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான். தோழி தலைவியை விட்டு நீங்கிவிட்டாள் என்று அறிந்ததும், அவ்விளைஞன் தலைவியின் தினைப்புனத்தை ஓயாமல் சுற்றி வருவதும், அவளது முழுத்தோற்றமும் பொலிவுறத் தெரியும் இடங்களில் நின்று அவளை உற்றுப் பார்ப்பதும், பன்றி முதலிய விலங்குகளை விரட்டுவதைப்போல கூச்சலிட்டு அவளது கவனத்தை ஈர்ப்பதும் ஆன முயற்சிகளில் மெல்ல மெல்ல ஈடுபடுகிறான்.

யாரோ ஒரு அழகுள்ள ஆடவன் தினைப்புனத்தை ஓயாமல் சுற்றுவதையும், தன்னையே சிற்சிலபொழுது உற்று நோக்குவதையும் அவள் உணர்கிறாள். அவன் உற்று நோக்கும்போது அவள் வெட்கம் தாளமாட்டாமல் வேறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்; அவனைத் தான் பார்க்கக்கூடாது என்று தனக்குள்ளே எண்ணிக்கொள்கிறாள். சிறிதுநேரந்தான் அவளால் அப்படியிருக்கமுடிகிறது. மீண்டும் ஒருமுறை அவனைப் பார்க்கவேண்டும்போல் அவளுக்குத் தோன்றுகிறது. அவனைப்பார்க்கிறாள். அவனும் அவளைப் பார்க்கிறான். இருவருடைய கண்களும் இப்படியாகப் பல தடவைகள் பேசிக்கொள்கின்றன. ஒருவர் உள்ளத்தை ஒருவர் பறித்துக்கொள்கின்றனர். சிலநாட்கள் அறிகுறிகளால் பேசிக்கொள்கின்றனர். இறுதியாக வாய்விட்டே ஒருவரோடொருவர் பேசிக், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

யாரும் அறியாத வகையில், யாரும் நடமாடாத இடத்திற்கு ஓடியாடி விளையாடவும், பந்தாட்டம் ஆடவும், புனல்நீராடி மகிழவும் தலைவன் தலைவியை அழைத்துச்செல்லும் பழக்கத்தை மேற்கொள்கிறான். தாங்கள் ஒழுகும் களவொழுக்கத்தைத் தோழி எவ்வகையிலும் அறிந்துகொள்ளக்கூடாது என்பதில் தலைவனும் தலைவியும் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள்.

தலைவியின் போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதையும், அளவுக்குமீறி அவளது உள்ளம் களிகொண்டு துள்ளுவதையும் கண்ட தோழி, தலைவியின் ஒழுக்கத்திலே ஐயங்கொள்கிறாள். யாரோடாவது களவொழுக்கத் தொடர்பு கொண்டிருப்பாளோ என்று எண்ணுகிறாள். அதனை எப்படியேனும் கண்டுபிடித்துவிடவேண்டும் என்று உறுதிகொள்கிறாள்.

ஒருநாள், தோழி, தினைப்புனத்திற்கு அருகிலுள்ள மலையின் வேங்கைமரத்தின் மறைவில் ஒளிந்து இருந்துகொண்டு, தலைவியின் நடவடிக்கைகள் தான் இல்லாதபோது எப்படி இருக்கின்றன என்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறாள். தோழி வீடுபோய்விட்டிருப்பாள் என்ற எண்ணத்துடன் தலைவன் தலைவியிடம் வருகிறான். இருவரும் ஓடிப்பிடித்து விளையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். தோழி உண்மையைக் கண்டறிந்துகொள்கிறாள். செய்தியை யாரிடத்தும் வெளிப்படுத்தாமல் தனக்குள்ளேயே வைத்துக்கொள்கிறாள்.

தோழி தான் ஏதும் அறியாதவள்போல, வழக்கம்போல் தலைவியிடம் பழகிவருகிறாள்; தலைவியும் தன் களவொழுக்கத்தைத் தோழி அறியமாட்டாள் என்ற எண்ணத்துடன் இருந்துவருகிறாள். சிலநாட்கள் இப்படியாகக் கழிகின்றன.

ஒருநாள் தலைவி தலைவனோடு சென்றிருக்கும்போது, தினைப்புனத்திலுள்ள கதிர்களையெல்லாம் பச்சைக்கிளிக் கூட்டங்கள் சூறையாடிச் சென்றுவிடுகின்றன. தலைவி திரும்பிவந்து பார்க்கும்போது தினைப்புனம் பாழாக்கப்பட்டுக்கிடக்கும் நிலையைக் காண்கிறாள். கண் கலங்குகிறாள். என்னசெய்வதென்று தோன்றவில்லை. திகைக்கிறாள். கையைப் பிசைந்துகொள்கிறாள். எப்படிப்பட்ட தவறு செய்துவிட்டோம் என்று எண்ணி ஏங்குகிறாள். தோழி பார்த்துவிட்டால், தாய்தந்தையர்க்குப் போய்ச்சொல்லிவிடுவாளே என்று அஞ்சுகிறாள். இறுதியாகப் பரண்மீது சோர்ந்து உட்கார்ந்துவிடுகிறாள்.

சிறிது நேரங்கழித்து தோழி வருகிறாள். தினைக்கதிர்களையெல்லாம் கிளிகள் சூறையாடிச் சென்றுவிட்ட அலங்கோலத்தைக் கண்டு திகைக்கிறாள்.

தோழி : (தலைவியைப் பார்த்து) ஏண்டீ இப்படி என்னடீ நடந்தது?

தலைவி : (அழுதுகொண்டே) கிளிக்கூட்டங்கள் வந்து சூறையாடிச் சென்றுவிட்டன. என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் தோன்றவில்லை!

தோழி : நீ அவைகளையெல்லாம் விரட்டவில்லையா ?

தலைவி : விரட்டினேன் ! ஆனால் என் விரட்டலுக்கு அஞ்சி அவை ஓடவில்லை !

தோழி : நீ கவண்கற்களைக்கொண்டு வீசினாய் அல்லவா ?

தலைவி : ஆமாம் வீசினேன் ! என்னால் முடிந்த மட்டும் கூச்சலிட்டுக்கொண்டு வீசிப் பார்த்தேன் ! நான் ஒருத்தி மட்டும் எப்படியடீ அவ்வளவு பெரிய கிளிக்கூட்டங்களை விரட்டியடிக்க முடியும் ?

தலைவியின் தலைமயிர் பரந்து கிடப்பதையும், கண்கள் சிவந்திருப்பதையும், ஆடைகள் கலைந்து உலர்ந்திருப்பதையும் கண்டு கொண்ட தோழி தலைவி தலைவனோடு சுனையாடவும், பந்தாடவும் சென்றுவந்திருக்கிறாள் என்பதைத் தனக்குள்ளாகவே அறிந்துகொள்கிறாள்.

தோழி : கிளிகள் படையெடுத்து வந்தபோது நீ வேறு எங்கேயேனும் சென்றிருந்தாயா?

தலைவி : (திடுக்கிட்டு) அப்படி எங்கும் போகவில்லையே ! இங்கேயேதான் இருந்தேன் !

தோழி : இங்கிருந்து நீ எழுந்துபோகவே இல்லையா ?

தலைவி : எழுந்துபோக எனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது ? நான் இங்கேயே தான் நீ சென்றதிலிருந்து இருந்துவருகிறேன் !

தோழி : கிளிகளை விரட்டக்கூட எழுந்து செல்லவில்லையா ?

தலைவி : (தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு) நான் ஒருத்தியாக இருந்ததால் இந்த இடத்திலிருந்தே கவண் கற்களை வீசிப்பார்த்தேன் ! நான் என்னசெய்வேன் ? என்னால் முடிந்த மட்டிலும் விரட்டியடிக்கப்பார்த்தேன் !

தோழி : இந்த அழிவை உற்றார்கள் பார்த்தால், உன்னை இனிக் காவலுக்கு வைக்கமாட்டார்கள் ! நீ வீடுபோய்ச் சேரவேண்டியது தான் !

தலைவி : (இனித் தலைவனைக் காணமுடியாமற் போய்விடுமோ என்பதை எண்ணி ஏங்கி அழத்தொடங்கி, அந்தக் கருத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று கருதி) காவலைச் சரியாகக் காக்காமைக்காகத் தாய் என்ன சொல்லித் திட்டுவார்களோ ? தந்தை என்ன சொல்லி அடிப்பார்களோ ? (என்று புலம்புகிறாள்).

தோழி : கதிர்கள் அழியும்படி கிளிகள் அவற்றைக் கவர்ந்துசெல்லும்போது நீ ஓடிப் போயல்லவா அவைகளை விரட்டியிருக்க வேண்டும் ?

தலைவி : நான்மட்டும் தனியாக எப்படியடீ ஓடுவேன் ?

தோழி : (கேலிகலந்த குரலில்) நீதான் இவ்விடம்விட்டு எழுந்திருக்கவே இல்லை அல்லவா? நீ எழாதவளாய் இருந்தாலும், அதற்காக இப்பொழுது ஏன் அழுது கொண்டிருக்கிறாய் ?

தலைவி : கதிர்கள் அழிவைக்குறித்து உற்றார்கள் என்ன சொல்லுவார்களோ என்று நினைக்கிறேன்; அழுகை தானாக வருகிறது !

தோழி : அழாதேடீ ! இங்கு அயலார் பலர் இருக்கிறார்கள் ! அவர்கள் போய் அலர் தூற்றுவார்கள் !

தலைவி : அலரா ? என்னைப்பற்றி ஏன் தூற்றப் போகிறார்கள் ? அப்படி என்னிடம் என்ன இருக்கிறது ?

தோழி : இனி அவனைக் காணமுடியாமற்போய் விடுமோ என்று எண்ணி நீ அழுகிறாய் என்பதை அவர்கள் அறிந்துகொண்டு விட்டால், அவர்கள் அலர்தூற்றாமல் வாளா இருப்பரோ ?

தலைவி : (சற்றுத் திகைப்புற்றுப் பின் சமாளித்துக்கொண்டு ஏதும் அறியாதவள்போல்) எவனைக் காணமுடியாது என்பதற்கடீ நான் அழப்போகிறேன் ?

தோழி : (கேலிச் சிரிப்பு சிரித்துக்கொண்டே) எல்லாம் தெரியுமடீ ! வேங்கைமலர் உதிரப்பெற்ற கூட்டிலே இருக்கும் மயில், தினைக்கதிர்களைக் கிளிகள் கொண்டு போவதை அறிந்திருந்தும், "நாம் கொய்துகொண்டு போவதை அம்மயில் அறியாது" என்று கிளிகள் கருதிக் கவர்ந்தேகுதல் போல, நான் உன் களவொழுக்கத்தை நன்றாக அறிந்துவைத்திருந்தும், "தோழி அறியமாட்டாள்" என்று கருதி நீ களவொழுக்கத்தைத் தொடர்ந்து நடத்திவருகிறாயே ! இவற்றையெல்லாம் நான் அறியமாட்டேனடீ ?

தலைவி : (சற்று வெட்கத்துடன்) நீ எதைக் கொண்டு அறிந்ததாகக் கூறுகிறாய்?

தோழி : உன் சிவந்த கண்கள் அவற்றைக் கூறுகின்றனவே! மழவர்கள் பன்றி முதலிய விலங்குகள்மீது அம்பை எய்து, அதனை மீண்டும் பறித்து எடுக்கும்போது குருதிக் கறைகள் அவ் அம்பின்மீது எப்படிப் படிந்திருக்குமோ அப்படித்தான் உன் கண்களிலே செவ்வரிகள் படர்ந்திருக்கின்றன! விலங்கினைக் கொன்று பறித்த அம்புபோல, உனது கண்களும் தலைவனை மயக்கிப் பாய்ந்து மீண்ட தன்மையுடையனவாக இருக்கின்றன!

தலைவி தோழியின் சொற்கேட்டு என்ன மறுமொழி பகர்வது என்று தோன்றாமல் நாணித் தலைகுனிகிறாள். தோழி தலைவிக்கு ஆறுதல் அளித்து, அவளது விருப்பத்தைத் தான் நிறைவேற்றிவைக்க ஆவன செய்வதாகக் கூறுகிறாள்!

ஃ ஃ ஃ

நற்றிணை 13-ம் செய்யுளின் கருத்தை உட்கொண்டு எழுதப்பட்ட காதற் காட்சியே மேலே காட்டப்பட்டதாகும். இதனைப் பாடியவர் கபிலர் ஆவார். கபிலர் சங்ககாலப் புலவர்களில் மிகச்சிறந்த ஒருவராவார். அவர் பாடிய பாட்டுக்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படும். அவர் பல அரசர்களாலும், வள்ளல்களாலும், குறிப்பாக வேள்பாரியாலும் போற்றப்பட்டு ஆதரிக்கப்பட்டவராவார். அவரது அகம்-புறம் பற்றிய பாட்டுக்கள் அனைத்தும் தெவிட்டாத் தீங்கனிகள் ஆகும்.

எழாஅய் ஆகலின் எழில்நலந் தொலைய
அழாஅ தீமோ நொதுமலர் தலையே
ஏனல் காவலர் மாவீழ்ந்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக்கண்
நல்ல பெருந்தோ ளோயே கொல்லன்
எறிபொற் பிதிரில் சிறுபல் காய
வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
மயிலற(பு) அறியா மன்றோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே.

—[நற்றிணை—13.]

[ஏனல் காவலர் பறித்த பகழியன்ன சேயரி பெருந்தோளோயே ஓங்குமலைக்கட்சி மயில் அறிவு பைம்புறக்கிளி அறியா பயில் குரல் கவரும். எழாஅ யாகலின் நொதுமலர் தலை அழாஅதீமோ என்று கொண்டுகூட்டி முடிக்கவேண்டும்.

பொழிப்புரை : தினைப்புனங்காவலையுடைய மழவர், ஆண்டுத் தின்று அழிக்கவந்த பன்றி முதலாய விலங்குகளையெய்து கொன்று மீண்டும் அவற்றினின்றும் பறித்தெடுத்த அம்புபோன்ற செவ்வரி பரந்த குளிர்ச்சியையுடைய கண்ணையும் நல்ல பெரியதோளையும் உடையாய்! கொல்லனது உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறுமாறு போலச் சிறிய பல காயையுடைய வேங்கையின் மலர்கள் உதிர்கின்ற உயர்ந்த மலையிலுள்ள கூட்டில் இருக்கும் மயில்கள் தாம் அறிதலைப் பசிய புறத்தினையுடைய கிளிகள் அறியாவாய் நெருங்கிய தினைக்கதிர்களைக் கவர்ந்துபோகாநின்றன, அதனால் அக்கதிர்களும் அழிந்துபோகின்றன காண்; அவற்றை ஓட்டவேண்டிய நீ இவ்விடத்திருந்தும் எழுந்தாயல்லை; அப்படி எழாது இருப்பினும் நின் அழகிய நலமெல்லாம் கெடும்படியாக அயலார் இருக்கும் இவ்விடத்து அழாது இருத்தலையேனும் செய்வாயாக.

வினவும் விளக்கமும்

வினு : மானம் பெரிதா? சோறு பெரிதா?

விளக்கம் : இப்படிப்பட்ட கேள்வியைத், தமி கத்திலுள்ள கம்யூனிசுட்டுக் கட்சியினர், ஆங்காங்கு, அடிக்கடி, திராவிட முன்னேற்றக் ழகத்தாரைப் பார்த்துக் கேட்டு, அதற்குத் ம்முடைய விடையாகச் சோறே பெரிது என்று உறிமுடிக்கின்றனர்.

மானமும் சோறும் நாம் ஏற்றுக்கொள்ளும் ளவுக்கு நம் எதிரே இருந்து, அவற்றில் தாவது ஒன்றைத் தேவையானது என்று டுத்துக்கொண்டால் போதுமா? அல்லது ரண்டையுமே தேவையானவைதாம் என்று ற்றுக்கொள்ள வேண்டுமா? அல்லது இரண டயுமே தேவையற்றவை என்று ஒதுக்கி டவேண்டுமா? என்று கேட்டால், இரண்டுமே ழுக்க முழுக்கத் தேவையானவைதாம் என்றுதான் ாம் குறிப்பிடுகிறோம்.

ஆனல் கம்யூனிசுட்டுத் தோழர்கள் வையா? அல்லவா? என்ற ஆராய்ச்சியில் இறங்கவில்லை; அவர்கள் எதுபெரிது? என்ற ஆராய்ச்சியில் மட்டுமே இப்பொழுது இறங்கி ருக்கிறார்கள்!

மானம் பெரிதா? சோறு பெரிதா?—இது அவர்க டைய கேள்வி. மானம்-சோறு ஆகிய இரண் டையும் ஒரேநிலையில் அடுத்தடுத்துவைத்து அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்து, எதைப்பெரிதாக ஏற்றுக்கொள்ள லாம் என்று கேட்கப்படுமேயானல், அந்தக் கேள்வி பொருத்தமுடையதாகாது. அந்தக் கேள்விக்குப் பொருளும் இருக்கமுடியாது. ஏனெனில் அந்த இரண்டும் ஒன்றிற்கு ஒன்று மாற்று (Substitute) அல்ல. மானம் உள்ளக் கிளர்ச்சிக்கு இனிது பயப்பது; ஆனல் சோறு உடலுக்கு இனிதுபயப்பது. மானம் நிறைவேற்றுகிற செயலே வேறு; சோறு நிறைவேற்றுகிற செயலே வேறு; இரண் டையும் ஒப்பிட்டுப்பார்த்து எது பெரிது என்று அறிவதுதான் கேள்வி என்றால், அதில் பொருளே இருக்கமுடியாது. இரண்டில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டால் போதுமானது என்று சொல்லக்கூடிய மாதிரி யில், இரண்டும் ஒன்றிற்கு ஒன்று ஒரே நிலை யின—தகுதியின அல்ல. இது இல்லாவிட் டால் அது, அது இல்லாவிட்டால் இது என்று கொள்ளக்கூடிய நிலையிலிருப்பவை யல்ல மானமும் சோறும். நாம் சாப்பிடவேண் டும் என்ற நிலையில் இருந்து, எதிரே இட்லி யும் தோசையும், இருந்தால், அவற்றில் இட் லி பெரிதா? தோசை பெரிதா? என்று ஒப்பிட்டுப்பார்த்துக் கேட்பதில் பொருள் இருக்கமுடியும்! நாம் ஒரு இடத்திற்குப் போக

நொறுமலர் - அயலார்; தலை - இடம்; ஏனல் - தினைப்புனம்; மா - விலங்கு; பகழி-அம்பு; சேயரி - சிவந்த கண்ணிலுள்ள கோடுகள்; வீ - பூ; கட்சி - கூடு; குரல் - கதிர்.]

தோழிக்குத் தெரியாமலேயே தலைவி தலைவ டன் களவொழுக்கம் நடத்துதல் உண்டு ன்பது இச்செய்யுளால் அறியப்படுகின் து.

பெண் தக்கப்பருவம் எய்தியபிறகு அவளைத் னைப்புனங்காக்கும் தொழிலில் ஈடுபடுத்து து பண்டைக்கால மரபாகும். பெண்கள் ண்மீது நின்று கிளியோட்டுதலும், மழவர் பன்றி முதலிய விலங்குகளை அணுகா ண்ணம் வில்லம்புகொண்டு தாக்குவதும் ண்டைக்கால வழக்கங்களாகும்.

சிவப்புக்கோடுகளோடு கூடிய கண்ணுக்குக் குருதி தோய்ந்த அம்பினை உவமையாக்கி யிருப்பதும், மயில் கூட்டின்மீது வேங்கைப் பூக்கள் உதிர்ந்து கிடப்பதற்குக் கொல்லனது உலைக்கூடத்தில் வைத்து இரும்பினை அடிக் கும்போது எழும்பி சிதறிவிழும் தீப்பொறிகளை உவமையாக்கியிருப்பதும் பெரிதும் பாராட் டுவதற்குரியனவாகும்.

தோழி தான் தெரியாமல் அறிந்துவைத்த உண்மையை மறைமுகமாக வெளிப்படுத்தும் பாங்கும் போற்றுவதற்குரியதாகும்.

வேண்டும் என்று இருந்து, ஏறிச் செல்வதற்குக் குதிரையும் கழுதையும் இருந்தால், குதிரை பெரிதா? கழுதை பெரிதா? என்று ஒப்பிட்டுக் கேட்பது பொருத்தமாக இருக்கும்! ஒரு வைதீகர் தலைமொட்டை அடிக்கவேண்டும் என்று இருந்து, பழனி மொட்டையையும் திருப்பதி மொட்டையையும் எடுத்துக்கொண்டால், பழனி மொட்டை பெரிதா? திருப்பதி மொட்டை பெரிதா? என்று ஒப்பிட்டுப்பார்க்கலாம்! விரைவாகச் செல்வதற்குக் கார் பெரிதா? குதிரைவண்டி பெரிதா? என்று கேட்பதில் பொருள் பொதிந்திருக்கமுடியும்! ஆனால் மானம் பெரிதா? சோறு பெரிதா? என்று ஒப்பிட்டுக்கேட்பதில் சிறிதும் பொருள் இருக்கமுடியாது; எனவேதான் மானம்—சோறு ஆகிய இரண்டும் ஒருசேரவைத்து எது பெரிது என்று ஒப்பிட்டுப்பார்க்கும் பொருள்கள் அல்ல என்பதை முதற்கண் உணரவேண்டும் என்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மானத்தை விட்டுவிட்டால்தான் சோறு கிடைக்கும் என்னும்போதும், சோற்றை விட்டுவிட்டால்தான் மானம் கிடைக்கும் என்னும்போதும் **மானமா? சோறா? எதைப் பெரிதாக மதிப்பது?** என்ற கேள்வி எழவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அடிப்படையில் எழும் கேள்விதான், விடையிறுக்கப்படவேண்டிய பொருள்பொதிந்த கேள்வியாகிறது.

மானத்தை விட்டுவிட்டு சோறா? சோற்றை விட்டுவிட்டு மானமா? என்ற கேள்வி எழும்போது, தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் **மானத்தை விட்டுவிட்டுச் சோற்றையே பெரிதாக மதிக்கலாம்** என்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தார் **சோற்றை விட்டுவிட்டு மானத்தைதான் பெரிதாக மதிக்கவேண்டும்** என்று திட்டவட்டமாகக் கருதுகிறார்கள்; அத்தகைய உயர்ந்த பண்பாடு நாட்டில் செழித்துவளரவேண்டும் என்று எண்ணுகிறார்கள்; அத்தகைய பண்பாடு மக்கள் உள்ளந்தோறும் வேரூன்றி இருந்தால்தான், இந்நாட்டு மக்கள் எல்லோரும் எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெற வழி ஏற்படும் என்று உறுதிகொள்கிறார்கள்.

மானம் அல்ல முக்கியம், சோறுதான் முக்கியம் என்று கம்யூனிசுட்டுத் தோழர்கள் கருதுகிறார்கள் என்றால், இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள முப்பத்தாறுகோடி மக்களுக்கும் வயிறார சோறுபோட அமெரிக்கா இசைந்து அதற்குப் பதிலாக இந்தியாவின் அரசியல்—பொருளாதார—சமுதாய உரிமைகளை அமெரிக்கா கேட்டால் உரிமைகளையெல்லாம் அமெரிக்காவிடம் விட்டுவிட்டு சோற்றை மட்டும் பெற்றுக்கொள்ளலாமா? கம்யூனிசுட்டுத் தோழர்கள் என்ன சொல்லுகிறார்கள்? அவர்களுக்குச் சோறுதானே முக்கியம்; மானம் அல்லவே! சோறுபோட இசைந்தால் அமெரிக்காவிடம் இந்திய மானத்தை விற்றுவிடலாமா? மானத்தைவிட சோற்றையே பெரிதென மதிக்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுகள் மானத்தைச் சோற்றுக்கு விற்க இசைவார்கள்போலும்! உருசிய மக்கள் அத்துணைப் பேர்க்கும் வயிறார சோறுபோட அமெரிக்கா இசைந்தால், உருசியாவை அமெரிக்காவிடம் எல்லாத்துறைகளிலும் ஒப்படைக்க உருசிய கம்யூனிசுட்டுகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுகள் முழுக்க முழுக்க விரும்புவார்கள் போலும்! இவர்கள்தான் மானத்தைவிட சோற்றைப் பெரிதெனக் கருதுகிறார்களே! மானமா? சோறா? என்றால், சோறுதான் மானமல்ல என்று துணிந்து இருகையேந்தி நிற்க இவர்கள் தயாராக இருக்கிறார்களே! ஒரு பணக்காரன் ஒரு ஏழைப் பெண்ணைப் பார்த்து, "ஏ பெண்ணே! உனக்கு வயிறார சோறுபோடுகிறேன்! என் ஆசை நாயகியாக என் அருகே வா!" என்று அழைத்தால் அப்பெண் அப்பணக்காரனிடம் போய்விடவேண்டியதுதானா? போய்விடவேண்டியதுதான் என்று தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுகள் கூறுகிறார்கள்போலும்! மானத்தை விற்றுச் சோற்றைப் பெறுவதா? சோற்றை விற்று மானத்தைப் பெறுவதா? என்று அந்தப் பெண் ஊசலாடிக்கொண்டிருந்தால், மானத்தை விற்றுச் சோற்றையே பெறு என்கிறார்கள் தமிழ்நாட்டுக் கம்னிசுட்டுகள்!

மானத்தோடு கூடிய சோறுதான் சிறப்புவாய்ந்ததே ஒழிய மானமற்ற சோறு சிறப்புவாய்ந்ததல்ல என்று கூற நாம் என்றும் தயங்குவதில்லை. ஆனால் கம்யூனிசுட்டுகள் மானமற்றசோறு ஆனாலும் அது விரும்பி ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுதான்; சோற்றுக்காகப் போராட்டம் நடத்தவேண்டுமே ஒழிய, மானத்துக்காகப் போராட்டம் நடத்தவேண்டியதில்லை; மானம் போனால் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், சோறுபோனால்தான் கவலைப்படவேண்டும்; மானத்தைவிட சோறே பெரிது" என்றெல்லாம் அகில உலகக் கண்ணோட்டக்காரர்களான கம்யூனிசுட்டுகள் கருதுகிறார்கள்; அக்கருத்தை நமக்கு எதிராகப் பரிமாறுகிறார்கள்! இவர்களது அகில உலகக் கண்ணோட்டம் இவ்வளவு இழிந்த நிலைக்காச் செல்ல

வேண்டும்! இவர்தம் நிலைகண்டு நாம் இரங்கத்தான் வேண்டியிருக்கிறது!

கம்யூனிசுட்டுகள் தங்களது வழிகாட்டியாகக் கருதும் உருசியாவை எடுத்துக்கொண்டால், அதன் புரட்சி வரலாறுகள் சோற்றைவிட மானத்தைத்தான் பெரிதெனக் கருதியிருக்கின்றன. தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுகளைப்போல் உருசியா மானத்தைவிட சோறே பெரிதெனக் கருதியதாகத் தெரியவில்லை! டால்சுடாய், புஷ்கின் போன்ற உருசிய இலக்கியப் பேரறிஞர்கள் சோற்றைவிட மானத்தைத்தான் பெரிதெனக் கருதியிருக்கிறார்கள்!

"உயிரைவிட மானமே பெரிது" என்பதுதான் தமிழகம் போற்றிவந்த சீரிய பழமொழியாகும். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்ற குறட்பாவின்மூலம் மானம் இழக்கும்படி நேர்ந்தவிடத்து உயிர்விடுவதுமேல் என்ற கருத்தை வள்ளுவர் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். "உயிரைவிட மானமே பெரிது" என்றால், "சோற்றைவிட மானமே பெரிது" என்று சொல்லவும் வேண்டுமோ. மேற்கண்ட குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர், "மானத்தை விட்டேனும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பது வடநூலார் கொள்கை, உயிரை விட்டேனும் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பது தமிழர்கொள்கை" என்னும் கருத்துப்படக் கூறியுள்ளார். வடநூலாரின செருக்கம் மிக்க நிறைந்துள்ள காரணத்தால், தமிழ்நாட்டுக் கம்யூனிசுட்டுக்கட்சி வடநூலாரின் அக்கொள்கையை ஏற்றுக்கொண்டது போலும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்கு மாசு கற்பிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கம்யூனிசுட்டுகள் கேட்கும் இந்தக் கேள்வியும், அதற்கு அவர்களே கூறும் விடையும் அவர்களது அறியாமையைத்தான் வெளிப்படுத்துகின்றன!

மானமா? சோறு? என்றால், மானந்தான்!

❖ ❖ ❖

ஐ : வீடுகட்டுவதற்கு ஒரு கொத்தனும் நாற்காலியைச் செய்வதற்கு ஒரு தச்சனும் இருப்பதைப் போல், இந்த உலகை உண்டாக்க ஒரு கடவுள் இருக்கத்தானே வேண்டும்? கடவுள் உலகை உண்டாக்கவில்லை என்று எப்படிக் கூறமுடியும்?

விளக்கம் : ஒரு வீட்டைப் பார்க்கிறோம்; அதனைக் கட்டிய ஒரு கொத்தனையும் பார்க்கிறோம்; அந்த வீட்டைக் கட்டியவன் அந்தக் கொத்தன்தான் என்பதைத் திட்டவட்டமாக அறிகிறோம். அதுபோலவே ஒரு குறிப்பிட்ட நாற்காலியை ஒரு குறிப்பிட்ட தச்சன்தான் செய்தான் என்பதைத் திட்டவட்டமாக அறிகிறோம். அதைப்போலவே உலகைப் பார்க்கிறோம்; ஆனால் அந்தக் கொத்தனைப்போல் தச்சனைப்போல் உலகை உண்டாக்கியதாகக் கற்பிக்கப்படும் 'கடவுளை'த் திட்டவட்டமாகப் பார்க்கமுடியவில்லை. பார்க்கமுடியவில்லை என்றால் கண்ணால் பார்க்கமுடியவில்லை என்ற பொருளில் மட்டுமல்ல, ஆறறிவாலும் பார்க்க முடியவில்லை அதாவது உணரமுடியவில்லை என்ற பொருளில்தான் கூறுகிறோம். எல்லோராலும் உணரக்கூடிய கொத்தனையும் தச்சனையும் உவமையாக்கிக்காட்டுவதன் மூலம், உணரமுடியாத 'கடவுளி'ன் உண்மையை நிலைநாட்டிவிடலாம் என்று வைதீகர்கள் எண்ணுவது ஆராய்ச்சி அறிவுக்குப் பொருந்திவருவதாக இல்லை.

வீட்டைக்கட்ட ஒரு கொத்தன் இருப்பதைப்போல், உலகை உண்டாக்க ஒரு 'கடவுள்' இருக்கத்தானே வேண்டும் என்றால், அந்தக் கடவுளை உண்டாக்க வேறொன்று இருக்கத்தானே வேண்டும்? அந்த வேறொன்றை உண்டாக்க இன்னும் வேறொன்று இருக்கத்தானே வேண்டும்? முடிவே இல்லாமல் இப்படிக் கேட்டுக்கொண்டேபோகலாமே! கொத்தனை உண்டாக்க எப்படித் தாய்தந்தையர்கள் இருக்கிறார்களோ, அப்படியே 'கடவுளை' உண்டாக்க யாரேனும் இருக்கத்தானே வேண்டும்? என்று கேட்டால் வைதீகர்களிடத்திலிருந்து தெளிவான விடை கிடைப்பதில்லையே!

'கடவுள்' தோற்றமும் முடிவும் அற்றவர், எனவே அவரை உண்டாக்க யாரும் இல்லை என்று சில வைதீகர்கள் கூறுகிறார்கள். 'கடவுள்' தோற்றமும் முடிவும் அற்றுத் தன்னந்தனியே சொர்க்கத்தில் இருந்துகொண்டு எல்லாச் செயல்களையும் செய்துவருகிறார் என்பது வைதீகர்களுக்கு மட்டும் புலப்படுவானேன்? அது பகுத்தறிவுவாதிகளுக்குப் புலப்படாமல் போவானேன்? கொத்தனும் தச்சனும் வைதீகர்கள்—பகுத்தறிவுவாதிகள் ஆகிய இருசாரார்க்கும் எப்படி ஒரேமாதிரி

யாகப் புலப்படுகிறார்களோ, அப்படியே, 'கடவுளு'ம் இருசாரார்க்கும் ஒரேமாதிரியாகப் புலப்படவேண்டும் அல்லவா? ஏன் பகுத்தறிவுவாதிகளுக்கு மட்டும் புலப்படவில்லை?

பகுத்தறிவுவாதிகளுக்குக் 'கடவுளை'க் காணும் 'பக்குவம்' இல்லை என்று வைதீகர்கள் கூறக்கூடும். 'பக்குவம்' வைதீகர்களுக்கு மட்டும் வந்து பகுத்தறிவு வாதிகளுக்கு வராமற்போவானேன்?

அதற்கு வைதீகர்கள் செய்த 'புண்ணிய'மும் பகுத்தறிவுவாதிகள் செய்த 'பாவமு'ம் காரணங்களாகும் என்று வைதீகர்கள் சொல்லக்கூடும். வைதீகர்கள் 'புண்ணியம்' செய்யத் தூண்டப்படுவானேன்? பகுத்தறிவுவாதிகள் 'பாவம்' செய்யத் தூண்டப்படுவானேன்?

'கடவுள்' விதித்த விதிப்படி வைதீகர்கள் புண்ணியமும், பகுத்தறிவுவாதிகள் பாவமும் செய்கின்றனர் என்று வைதீகர்கள் கூறக்கூடும். ஒருவருக்குப் புண்ணியம் செய்யக்கூடிய விதியையும், மற்ற ஒருவருக்குப் பாவம் செய்யக்கூடிய விதியையும் ஏற்படுத்துவானேன்?

அதற்குக் காரணம் 'கடவுள் சித்தம்' என்று வைதீகர்கள் பகரக்கூடும். ஒரே தன்மை வாய்ந்த இரண்டு 'ஆத்மாக்களி'டம் 'கடவுள்' இருவேறுபட்ட 'சித்தத்'தைக் காட்டுவானேன்?

அதற்குக் காரணம் கடவுளின் 'திருவிளையாடல்' என்று செப்பக்கூடும். 'திருவிளையாடலி'ன் மூலம் ஒரு ஆத்மாவுக்கு இன்பத்தையும் மற்றொரு ஆத்மாவுக்கு துன்பத்தையும் கொடுக்கும் 'கடவுள்' எப்படி விருப்பு வெறுப்பு அற்றவராவார்?

இதனை 'ரிசிகளை'த் தவிர சாதாரண மக்களால் 'புரிந்துகொள்ள' முடியாது என்று கூறுவர். 'புரிந்துகொள்ள' முடியாத நிலையில் 'கடவுளு'க்குப் பொருளுமில்லை; இடமும் இல்லை; அவசியமும் இல்லை! ஆதாரம் ஏதும் இல்லாத கற்பனைச் 'சொல்லை' உண்மை என்று எப்படி நம்புவது? ஏன் நம்பவேண்டும்?

அண்டபிண்ட சராசரம் அனைத்தும் இல்லையா? என்றால், இருக்கின்றன என்றுதான் செப்புகிறோம். அவையெல்லாம் என்ன என்றால், இயற்கை என்கிறோம்! இயற்கை அண்டபிண்டசராசரம் அனைத்திற்கும் காரணமுமாய் அனைத்துமாய் இருக்கிறது என்கிறோம். இயற்கைக்கு அப்பாற்பட்ட 'ஒன்று' எங்கேயோ இருந்துகொண்டு எல்லாவற்றையும் உண்டாக்கிக்கொண்டிருக்கவில்லை; இயற்கையே எல்லாமுமாய் வளர்ந்து நிற்கின்றது; எல்லாம் இயற்கையின் கூறுபாடுகளே! ஞாயிறு, கோள், உடு, உலகம், புல், பூண்டு, மீன், தவளை, பாம்பு, பன்றி, யானை, கழுகு, கருடன், மனிதன், அவன் எண்ணம், அவன் செயல் ஆகிய எல்லாமும் இயற்கையின் கூறுபாடுகளே! இயற்கை எங்கேயோ உட்கார்ந்துகொண்டு தனது கூறுபாடுகளில் ஒன்றான மனிதனின் வணக்கத்தையும், வாழ்த்தையும், வழிபாட்டையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவில்லை! இயற்கையின் கூறுபாடுகளில் மிகச்சிறந்த உள்ளத்தோடு கூடிய கூறுபாடு மனிதன் தான். இவன் இயற்கையோடு இயற்கையாய் ஒன்றியவனேயொழிய, இயற்கை இவனைத் தனியே பிரித்துவைத்து, இவனிடம் எதனையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. மனிதன் மனிதனிடம் விருப்பு வெறுப்புக்களை எதிர்பார்க்கிறான்; இதுவும் இயற்கைதான். ஆனால் மனிதனிடம் முழுமுதலியற்கை வந்தனை, வழிபாடுகளை எதிர்பார்க்கிறது என்று எண்ணுவது இயற்கையல்ல; பொய்க்கூற்று! முழுமுதலியற்கைதான் 'கடவுள்' என்றால், அப்படி வைத்துக்கொள்ளும் அளவுக்கு வேண்டுமானால் 'கடவுள்' என்ற சொல்லைப் பயன்படுத்திக்கொள்ளலாமேயொழிய, அதனை இயற்கைக்கு மீறிய ஆற்றலாகக்கொண்டு, அதற்குக் கோயில்கட்டுதல், திருவிழா நடத்துதல், வந்தனை வழிபாடு செய்தல், அபிசேக ஆராதனைகள் செய்தல், காணிக்கைச் செலுத்துதல், நன்றி தெரிவித்தல் போன்ற எவையும் செய்யவேண்டியதில்லை.

இயற்கையே உலகாக உருமாறி, உலகு இயற்கையின் ஒரு கூறுபாடாய் இருந்துவருகிறது; இதனை உண்டாக்கக் 'கடவுள்' என்ற ஒன்று தனியே இருந்துகொண்டிருக்கவில்லை என்று உணர்க!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

சாதாரணக் கால்சட்டை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சென்ற இதழ் விளக்கப்படத்தைப் பார்க்கவும்.

-ல் இருந்து 15 வரை $5\frac{1}{4}$ அங்.
($\frac{1}{4}$ முழங்கால் சுற்று அளவு)
-ல் இருந்து 15 வரை $5\frac{1}{4}$ அங்.
(19, 15-க்கும் உள்ள அளவு)
-ல் இருந்து 4 வரை $1\frac{1}{2}$ அங்.
(5, 4-க்கும் உள்ள அளவில் பாதி)
ல் இருந்து 16 வரை $\frac{3}{4}$ அங்.

17, 16, 18 எண்களைப் படத்தில் உள்ளபடி ளைவாக இணைக்கவும்.

17, 16, 18 எண்களுக்குக் கீழ் $2\frac{1}{2}$ அங். சாய் க்கோடு வரைவது இருப்பது கால்பட்டி டிப்பைக் குறிக்கும்.

12, 11, 2, 20, 18 வரை நெடுங்கால் வளைவை த்தில் உள்டபடி வரைந்துகொள்ளவும்.

14, 1 வரை நெடுங்காலில் உள்ள சாய்வுக் ாடு வரை வெட்டி எடுத்துவிடவும்.

6, 21 எண்கள் வரை புள்ளி வைத்துள்ள டம்வரை குறி ஒதுக்கம் ஒருபக்கம் மட்டும் வட்டி எடுக்கவும்.

முன்பக்கத்தை கோட்டின்மீது வெட்டவும். ன்பக்கத்தை ஆதாரமாகக் கொண்டே பின் கம் வெட்டவேண்டும்.

படம்—2

ல் இருந்து 5 வரை $1\frac{1}{2}$ அங்.
(ஸ்கேலில் 12-ல் ஒருபாகம்)
ல் இருந்து 22 வரை $\frac{1}{2}$ அங்.
ல் இருந்து 19 வரை 1 அங்.
ல் இருந்து 17 வரை 1 ,,
ல் இருந்து 27 வரை 9 ,,
($\frac{1}{4}$ இடுப்பு அளவு $+1\frac{1}{2}$ அங்.)
ல் இருந்து 28 வரை $2\frac{1}{4}$,,
ல் இருந்து 29 வரை 9 ,,
ல் இருந்து 26 வரை $2\frac{1}{4}$,,
ல் இருந்து 29 வரை $1\frac{1}{4}$,,
0-க்குமேல் 1 அங். உயர்த்தி படத்தில் உள்ளபடி வரையவும்.
ல் இருந்து 28 வரை 4 அங்.
32-ல் இருந்து 31 வரை $6\frac{1}{2}$ அங்.
(32, 31-க்கும் மத்தியில் ஒரு அங்குலம் டார்ட்டு பிடிக்கவும்)
32-ல் இருந்து 7 வரை 11 அங்.
($\frac{1}{4}$ புட்டம் சுற்று அளவு$+2$ அங்.)
34-ல் இருந்து 29 வரை $\frac{1}{2}$ அங்.

6, 7, 26, 29 வரை சாய்வு கோடு வரைந்து பின்பக்க வளைவை 22, 7, 26, 34 வரை வரைந்துகொள்ளவும்.

பின்பக்கம் இடுப்பு (26 எண்) உள்ள இடத்தைக் கண்டுபிடிக்கும் விதம்.

26-ல் இருந்து 27 வரை சாய்வுக்கோடு வரைந்துகொள்ளவேண்டும். 26, 27-க்கு 9 அங்குலத்தில் அடையாளம் செய்துகொள்ளவும். மூல மட்டப்பலகையை 27-க்கும், 7-க்கும் படத்தில் உள்ளபடி வைத்து வரைந்தால், மட்டப்பலகையின் மூலை வருகின்ற இடமே தான் 26 எண்ணுள்ள இடம் என்று கொள்ள வேண்டும்.

34, 7, 22, 24, 28 எண்களுக்கும், 17, 16, 18 எண்களுக்கும் பக்கத்தில் சாய்வுக்கோடுகள் வரைந்து இருப்பது தையலுக்குத் தேவையான உள துணிவைத்து இருப்பதைக் குறிக்கும்.

தையலுக்கு $\frac{1}{4}$ அங்குலம் வைத்துப் படம் வரையப்பட்டுள்ளது.

ஒவ்வொரு எண்ணுக்கும் படத்தில் வரைந்துள்ள நேர்க்கோடுகளையும் வளைவுகளையும் இணைத்த பிறகே வெட்டத்தொடங்கவும்.

புதிய வெளியீடு!

தையற்கலை

ஆசிரியர் : K. P. சுந்தரம் G. C. T.

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் உரிய பல வித உடைகளை வெட்டித் தைக்கும் முறை இந்நூலில் 50-க்கு மேற்பட்ட விளக்கப் படங்களுடன் வரையப்பட்டுள்ளது. ஆசிரியர் துணையின்றித் தாமே வெட்டித் தைப்பதற்குச் சிறந்த நூலாகும். எவரும் எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழில் முதன் முதல் வெளிவரும் தையற்கலைப் புத்தகமாகும்.

பெண்ணின் பெருமைக்குச் சிறந்த கலைத் துறை ஏடாகும். அரசாங்கத் தேர்வில் வெற்றி பெற விரும்பும் பெண்மணிகளுக்குப் பெரிதும் உதவி செய்யும். விலை ரூ. 2 0 0.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி

அவ்வை புத்தக நிலையம்

கம்பார் (பேரா)

அறிஞர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன் டாக்டர் மு. வரதராசனார்,
மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரின் கருத்துக்குவியல்
களும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், தாயகத்தி
லிருந்து வெளியாகும் வார, மாத இதழ்கள் யாவும், மற்றும் சினிமா வசன
பாட்டு புத்தகங்களும் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.
மற்றும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் கல்கண்டு, பேசும்படம் முதலான
பத்திரிகைகளும் கிடைக்கும்

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான புத்தகம், நோட்புக், பென்சில் முதலிய
இதர சாமான்களும் விலை சரசமாகக் கிடைக்கும்

மலேயாவிலுள்ள தினசரி வார மாத இதழ்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்

நிர்வாகிகள்
சி. அண்ணாமலை, கோ. வரதராசன்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1